Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 12

புதன்கிழமை
08 டிசெம்பர் 2021

கார்த்திகை 22 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16

விலை: 30/=

**கொரோனா**
நேற்று 747
மொத்தம் 5,67,697

**உயிரிழப்பு**
நேற்று 21
மொத்தம் 14,505

**குணமடைவு**
5,43,111

### பண்டிகைக் காலத்தில் சுகாதாரத்தைக் கைவிட்டால்

# ஜனவரியில் ஒமிக்ரோன் இலங்கையில் விஸ்வரூபம்!

### மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, டிசெம்பர் 8

நைஜீரியாவிலிருந்து நாடு திரும்பிய உள்ளூர்வாசி ஒருவருக்கு ஒமிக்ரோன் மாறுபாடு தொற்றிக் கொண்டதைப் போலவே, துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் மூலமாக புதிய வகைத்தொற்று நாட்டுக்குள் நுழைகிறது. பண்டிகைக் காலங்களில் வைரஸ் பரவும் அபாயத்தைக் கவனத்தில் கொள்ளாவிட்டால், எதிர்வரும் ஜனவரி மாதத்துக்குள் வைரஸ் வேகமாகப் பரவுவதைக் காண முடியும். 15 >




## சங்கானையில் 14 பவுண் திருட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 8
மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சங்கானை நிற்சாமம், சிலம்புபுளி 15 >

## வவுனியாவில் ஒரே இரவில் 5 கடைகளில் பணம் திருட்டு

வவுனியா, டிசெ. 8
வவுனியா நகரப்பகுதியில் அமைந்துள்ள 5 விற்பனை நிலையங்க 15 >

## நேற்றும் இரு வெடிப்புகள்

சாவகச்சேரி, டிசெ. 8
சாவகச்சேரி, கல்வயல் மற்றும் கொடிகாமம் பகுதிகளிலும் நேற்று எரிவாயு சிலிண்டர் அடுப்புகள் வெடித்துள் 15 >

### 4 தொழிற்சங்கங்கள்
## நாடு முழுவதும் இன்று போராட்டம்

சாவகச்சேரி, டிசெ. 8
பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, நாடு முழுவதும் நான்கு தொழிற்சங்கங்கள் இன்று புதன்கிழமை 15 >

## போராட்டத்துக்கு வடக்கு ஆதரவு!

முல்லைத்தீவு, டிசெ. 8
நாடு முழுவதுமுள்ள அரச தொழிற்சங்கங்கள் இன்று மேற்கொள்ளவிருக்கும் ஒருநாள் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்துக்கு வடக்கு மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கமும் ஆத 15 >

## காணி அபகரிப்புக்கு எதிரான போராட்டத்தை முடக்கும் சதியா?

*மாதகலில் இருவரின் கைதையடுத்து முகாம் முன்பாக நேற்று எதிர்ப்பு நடவடிக்கை*

யாழ்ப்பாணம், டிசெ. 8
மாதகல்கடற்பரப்பில் 276 கிலோகிராம் கஞ்சா மீட்கப்பட்டதோடு, அதனுடன் தொடர்புடையவர்கள் என்றுகூறி, கடற்படைக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் இருவரை கடற்படையி 15 >

## 2ஆவது நாளாகவும் எதிரணி போராட்டம்

*சபை அமர்வு புறக்கணிப்பு எம்.பிக்களுக்கு சபாநாயகர் அழைப்பு இன்று குழு அமைப்பு*

கொழும்பு, டிசெ. 8
பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியினர் நேற்று இரண்டாவது நாளாகவும் சபை அமர்வுகளை புறக்கணித்திருந்தனர். அதேவேளை, நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று இரண்டாவது நாளாகவும் கவனவீர்ப்பு போராட்டத்தையும் மேற்கொண்டனர். தமது கட்சி உறுப்பினரான மனுஷ 15 >

### கூட்டமைப்பின் ஆளுகையிலிருக்கும்
## வவுனியர் வடக்கு சபையின் பாதீடு மீண்டும் தோல்வி!

வவுனியா, டிசெ. 8
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வசமுள்ள, வவுனியா வடக்கு பிரதேச சபையின் பாதீடு 9 மேலதிக வாக்குகளால் இரண்டாவது தடவையாகவும் தோற்கடிக்கப்பட்டது.
சபையின் மாதாந்த அமர்வு தவிசாளர் ச.தணிகாசலம் தலைமையில் நேற்று நடைபெற்றது. கடந்த 15 >

### முச்சந்தி முரளி



அப்ப அடுத்த வருசமும் எங்களுக்கு ஒமிக்ரோன் எண்ட ஆப்பு வைச்சபடி தான் பிறக்கப் போகுது போல

## கரைசேரும் சடலங்களால் உறவுகள் பேரச்சத்தில்!

*சுரேஷ் பிரேமச்சந்திரன் சுட்டிக்காட்டு*

யாழ்ப்பாணம், டிசெ. 8
யாழ். மாவட்ட கடற்கரைகளில் கரையொதுங்கும் சடலங்கள் தொடர்பில் இதுவரை தகவல்கள் வெளியாகாத நிலையில், காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளது என்று, ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப் 15 >




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பிரியந்த குமாரவின் குடும்பத்துக்கு ஒரு இலட்சம் அமெ.டொலர்

பாகிஸ்தானும் இழப்பீடு

மாதாந்தச் சம்பளம் வழங்கவும் முடிவு

கொழும்பு, டிசெ. 8

கொடூரமாகத் தாக்கி கொலை செய்யப்பட்ட பிரியந்த குமாரவின் குடும்பத்தாருக்கு ஒரு இலட்சம் அமெரிக்க டொலர் இழப்பீடு வழங்க பாகிஸ்தான் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அவரின் சம்பளத்தை மாதாந்தம் வழங்கவும் பாகிஸ்தான் அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பிரியந்த குமாரவின் குடும்பத்துக்கு 25 இலட்சம் ரூபா பணத்தை வழங்கவுள்ளதாக இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ள நிலையில், மேற்படி அறிவிப்பை பாகிஸ்தான் விடுத்துள்ளது.

புலம்பெயர் பணியாளராக 11 வருடங்களுக்கு மேல் இலங்கை பொருளாதாரத்துக்கு பிரியந்த குமார வழங்கிய ஒத்துழைப்பை கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் சியால்கோட்டிலுள்ள தொழிற்சாலை ஒன்றில் பொது முகாமையாளராகக் கடமையாற்றிய பிரியந்த குமார , கடந்த 3 ஆம் திகதி கொடூரமான முறையில் தாக்கி எரியூட்டி கொலை செய்யப்பட்டார். (த-இ)

# தமிழ்க் கூட்டமைப்புக்காக குரல்கொடுத்த ஆளுங்கட்சி!

**கொழும்பு, டிசெ. 8**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்காக நாடாளுமன்றத்தில் நேற்று குரல் எழுப்பிய ஆளுங்கட்சி உறுப்பினர்கள், எதிரணியிலுள்ள முக்கியமான கட்சி அதுவெனவும் சுட்டிக்காட்டினர்.**

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியது. பிரதான சபை நடவடிக்கைகள் நிறைவடைந்த பின்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் ஒழுங்குப்பிரச்சினையொன்றை எழுப்பினார்.

"வரவு செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தின்போது எதிர்க்கட்சிகளின் சார்பில் விவாதத்தை ஆரம்பித்து வைப்பதற்கு 33 பேரின் பெயர்கள் கையளிக்கப்பட்டுள்ளன. அந்த பெயர்ப்பட்டியலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் இடம் பெறவில்லை. ஜே.வி.பியின் சார்பில் மூவரே நாடாளுமன்றத்தில் உள்ளனர். அவர்களில் இருவருக்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. 13 பேர் இருந்தும் தமிழ்க் கூட்டமைப்புக்கு இடமளிக்கப்படவில்லை. இது பெரும் அநீதியாகும். எனவே, விவாதத்தை ஆரம்பித்துவைத்து (கட் மோசனை) உரையாற்றுவதற்கு எங்களுக்கும் நேரம் ஒதுக்கப்பட வேண்டும்." என வலியுறுத்தினார்.

அதன்பின்னர், இது தொடர்பில் கருத்து வெளியிட்ட ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா,

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது எதிரணியிலுள்ள மிக முக்கிய கட்சியாகும். ஓர் இனக்குழுமத்தை அந்தக்கட்சியினர் பிரதிநிதித்துவம் செய்கின்றனர். 33 பேரடங்கிய பட்டியலில் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு எதிர்க்கட்சித் தலைவர் வாய்ப்பளிக்கவில்லை. இதன்மூலம் தமிழ் மக்களுக்கு சஜித் பிரேமதாஸ பெரும் அநீதி இழைத்துள்ளார். எனவே, கூட்டமைப்பினருக்கு உரிய நேரத்தை வாய்ப்பை வழங்குங்கள்." - என்றார். இது தொடர்பில் கருத்து வெளியிட்ட ஆளுங்கட்சி பிரதம கொறடாவான அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ,

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது வடக்கு - கிழக்கு வாழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சி. அங்குள்ளவர்களுள் பெரும்பாலானவர்கள் சஜித்துக்கே வாக்களித்தனர். அவ்வாறு வாக்களித்த மக்களை சஜித் இப்படிதான் கவனிக்கின்றார். ஜனநாயகம் பற்றி அவர் கதைக்கின்றார். ஆனால் எதிரணியிலேயே ஜனநாயக வாய்ப்பு நிராகரிக்கப்பட்டுள்ளது" - என்றார். (த-44)

## ஐஸ், கஞ்சாவுடன் துன்னாலையில் ஒருவர் கைது



யாழ்ப்பாணம், டிசெ. 8

வடமராட்சி துன்னாலை பகுதியில் ஐஸ் மற்றும் கஞ்சா போதைப் பொருள் வைத்திருந்தார் என்று குற்றம்சாட்டி, இராணுவத்தினரால் நேற்று ஒருவர் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

அவர் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர், துன்னாலைப் பகுதியில் போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபடுகின்றார் என்று இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து குறித்த இடத்துக்கு விரைந்த இராணுவத்தினர் சந்தேகநபரை பிடித்தனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-20)

## ஜனாதிபதி தலைமையில் நடந்தது பாதுகாப்புக் கூட்டம்

பாதுகாப்பு பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில் நேற்று நடைபெற்றது.

பாதுகாப்பு பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் தலைவர் என்ற ரீதியில் இந்தக்கூட்டத்தில் ஜனாதிபதி கலந்துகொண்டார்.

நாட்டின் தேசிய பாதுகாப்பு, சட்டம் மற்றும் ஒழுங்கு, தற்பொழுது பாதுகாப்புத் தரப்பினரால் கவனம் செலுத்தப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் அமைச்சர் சமல் ராஜபக்ச உள்ளிட்ட அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகள் மற்றும் யோசனைகள் இங்கு கலந்துரையாடப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (த-இ)


## கஜமுகாசுர சங்காரம்

யாழ்ப்பாணம், டிசெ. 8

வட்டு. வடக்கு கற்பகப்பிள்ளையார் கோவிலில் பிள்ளையார் பெருங்கதைப் படிப்பின் 20ஆம் நாளான இன்று முற்பகல் பெருங்கதைப் படிப்பும் மாலை கஜமுகாசுர சங்காரமும் நடைபெறவுள்ளன.

நாளை பெருங்கதைப்படிப்பு நிறைவுறுவதுடன் பெருமானுக்கு விசேட அபிஷேக ஆராதனைகளும் இடம் பெறவுள்ளன. (த)

## நல்லூர் பிரதேச சபை பட்ஜெட் நிறைவேற்றம்



யாழ்ப்பாணம்,டிசெ.8

நல்லூர் பிரதேசசபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நேற்று நிறைவேற்றப்பட்டது.

சபையின் தவிசாளர் மயூரனின் தலைமையில் புதிய வரவு-செலவுத்திட்டம் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

இதன்போது ஒவ்வொரு கட்சியின் உறுப்பினர்களும் தமது கருத்துக்களை வெளியிட்டனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினர் கிரிதரன் வரவு செலவுத் திட்டத்தை முன்மொழிந்த நிலையில், ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் உறுப்பினர் ஸ்ரீ கணேசா வழிமொழிந்தார்.

தொடர்ந்து நல்லூர் பிரதேச சபையின் செயலாளரால் வரவு-செலவுத் திட்டம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

20 உறுப்பினர்களைக் கொண்ட சபையில் 12 வாக்குகள் ஆதரவாகவும், 8 வாக்குகள் எதிராகவும் கிடைத்தன. மேலதிக 4 வாக்குகளால் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது. (ஒ-4-125)

கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் இரவு

# யுவதியைக் கடத்திச்சென்ற டிப்பரே விபத்துக்குள்ளாகியது

கிளிநொச்சி, டிசெ. 8

கிளிநொச்சியில் வேகக்கட்டுப்பாட்டை இழந்த டிப்பர் வாய்க்காலில் வீழ்ந்ததில் ஒருவர் சம்பவ இடத்திலேயே நேற்றுமுன்தினம் உயிரிழந்திருந்தநிலையில், குறித்த டிப்பரில், யுவதி ஒருவரைக் கடத்திச்சென்றபோதே அது விபத்துக்குள்ளானது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த யுவதிக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டிருந்தது. இந்தநிலையில், அவரை 7 பேர் சேர்ந்து பலவந்தமாகக் கடத்திச்சென்றனர். இதையடுத்து, யுவதியின் குடும்பத்தினர், அயலவர்கள் அந்த டிப்பர் வாகனத்தை விரட்டிச் சென்றுள்ளனர்.

டிப்பர் வாகனத்தின் பின்னால், கடத்தலில் ஈடுபட்ட தரப்பைச் சேர்ந்த ஒருவர் மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளார்.

யுவதியின் உறவினர்கள் விரட்டி வரும் தகவலை தொலைபேசியில் டிப்பர் சாரதிக்கு தெரிவித்து விட்டு, அவரும் அதிவேகமாக தப்பிச் சென்றுள்ளார்.

அவர்களிடமிருந்து தப்பிக்க, சாரதி வாகனத்தை அதி வேகமாகச் செலுத்திச் சென்றுள்ளார். இதன்போது, வேகக்கட்டுப்பாட்டை இழந்த டிப்பர், புதுப்பாலம் பகுதியில் வாய்க்கால் ஒன்றுக்குள் வீழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில், கிளிநொச்சி நாகேந்திரபுரம் பகுதியைச் சேர்ந்த டிலக்சன் (வயது - 17) என்பவரே உயிரிழந்துள்ளார்.

கடத்தப்பட்ட 23 வயதுடைய யுவதி படுகாயம் அடைந்த நிலையில், கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் கொட்டடியிலுள்ள

# எரிவாயுக் களஞ்சிய சாலையை அகற்றுமாறு மக்கள் போராட்டம்

**யாழ்ப்பாணம், டிசெ. 8**

**யாழ்ப்பாணம் - கொட்டடிப் பகுதியில் அமைந்துள்ள எரிவாயு சிலிண்டர் களஞ்சிய சாலையை அகற்றுமாறு அந்தப் பகுதி மக்கள் நேற்றுப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.**

'எமது உயிருக்கு யார் உத்தரவாதம்', 'நாம் ஆரோக்கியமான சந்ததியாய் வாழ வழிவிடு', 'தரமற்ற எரிவாயுக் கசிவால் ஏற்படும் ஆபத்துக்கு யார் பொறுப்பு?' என்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஏந்தியிருந்தனர். குறித்த களஞ்சிய சாலை மூலம் சுற்றுச்சூழல் மாசு ஏற்பட்டுள்ளதாகவும், களஞ்சிய சாலைக்கு முன்பாக கனரக வாகனங்கள் நிறுத்தி வைக்கப்படுவதனால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுவதாகவும், குறிப்பாக அருகில் உள்ள பாடசாலைக்கு நடந்து செல்லும் மாணவர்கள் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் குறிப்பிட்டு அந்தக் களஞ்சிய சாலையை அகற்றவேண்டுமென்று குறித்த பகுதி மக்கள் மீனாட்சி சனசமூக நிலையம் ஊடாக யாழ்ப்பாண பிரதேச செயலர், யாழ்ப்பாணம் மாநகரசபை முதல்வர், நகர அபிவிருத்தி அதிகார சபை பிரதிப்பணிப்பாளர் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபை பிரதிப்பணிப்பாளர் உள்ளிட்ட பல தரப்பினரிடம் கோரிக்கை விடுத்திருந்தனர். இதன் தொடர்ச்சியாகவே மேற்படி போராட்டம் நடத்தப்பட்டுள்ளது. (ம-20)

சுதந்திரபுரம் அகழ்வுப் பணி

## தங்கம் கிடைக்காததால் பணிகள் நிறுத்தப்பட்டன



முல்லைத்தீவு, டிசெ. 8

முல்லைத்தீவு மாவட்டத்தின் சுதந்திரபுரம் பகுதியில் விடுதலைப் புலிகளால் தங்கம் புதைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணிகள், தங்கம் எதுவும் கிடைக்காததை அடுத்து நேற்றுமுன்தினம் நிறைவுக்கு வந்தன.

தங்கம் புதைக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் புதுக்குடியிருப்பு பொலிஸில் வழக்குத் தொடரப்பட்டு, நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இந்தநிலையில் தங்கம் எதுவும் கிடைக்காததை அடுத்து நேற்றுமுன்தினம் மாலை அகழ்வுப் பணிகள் நிறைவுக்குக் கொண்டுவரப்பட்டன.

அகழ்வின்போது கிடைத்த சான்றுப் பொருள்களை நீதிமன்றத்தில் பாரப்படுத்துமாறும் வழக்கு ஜனவரி மாதம் 25ஆம் திகதி இடம்பெறும் என்றும் மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா உத்தரவிட்டார். (ம-19)

## கொட்டடியில் எறிகணை மீட்பு

யாழ்ப்பாணம், டிசெ.8

யாழ்ப்பாணம், கொட்டடி மீனாட்சி அம்மன் கோயிலுக்கு அருகில் உள்ள வீடொன்றில் எறிகணை ஒன்று மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த வீட்டின் உரிமையாளர் துப்புரவுப் பணிகளை மேற்கொண்டபோது, எறிகணை ஒன்றை அவதானித்துள்ளார். அது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர். (எ-125)

## 145 கிலோ கேரள கஞ்சா வவுனியாவில் சிக்கியது

வவுனியா, டிசெ.8

வவுனியாவில் இரண்டு கோடி ரூபா பெறுமதியான 145 கிலோ கேரளக் கஞ்சாவைக் கடத்தினர் என்ற குற்றச்சாட்டில் இருவர் ஓமந்தைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி மீன்களை ஏற்றிச் செல்லப்பயன்படும் கூலர் ரக வாகனம் நேற்று மதியம் வவுனியா ஓமந்தையில் அமைந்துள்ள சோதனைச் சாவடியில் வழிமறிக்கப்பட்டு சோதனையிடப்பட்டது.

அந்த வாகனத்தில் இருந்து கேரளக் கஞ்சா மீட்கப்பட்டதுடன் வாகனத்தில் பயணித்த [illegible] இருவர் கைது செய்யப்பட்டனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதினம் தெரியுமோ?

தமிழன் என்டொரு இனமுண்டு. அதுக்கொரு குணமுண்டு எண்டு சொல்லுவினம். அப்பிடித் தமிழனுக்கு என்ன குணமிருக்குத் தெரியுமோ? மற்றவையைப் பற்றிக் கொஞ்சமும் யோசிக்க மாட்டம். எங்களுக்கு என்ன லாபமோ அதை மட்டும் செய்வம். எங்கட வீட்டு வளவுக்க இருக்கிற குப்பை கூளங்களை பக்கத்துக்கு வீட்டுக்க கூச்சநாச்சமில்லாமல் போடுறதுதான் அந்தத் தமிழ்க் குணம். அப்பிடி ரத்தத்தில ஊறின குணம், வீடுகளில மட்டுமில்ல வெளியிடங்களிலையும் வெளிப்படாமல் இருக்குமோ? அப்பிடி நாங்கள் எல்லாம் தமிழ்க் குணம் கொண்ட ஆக்கள் எண்டு யாழ்ப்பாணத்தார் இப்ப ஆரியகுளத்தில நிரூபிச்சுக் கொண்டிருக்கினம்.

எக்கச்சக்கம் சர்ச்சைகள், எதிர்ப்புகளோட தொடங்கின ஆரியகுளம் திருத்தவேலை முடிஞ்சு, திறந்தும் வைச்சாச்சு. மின்விளக்குகள், குதிச்சுப் பாயிற தண்ணீத்தாரைகள் எண்டு வலு கலக்கலா ரவுனுக்கு நடுவில இருக்கிற ஆரியகுளத்தின்ர புது அவதாரத்தைப் பார்க்க எல்லாருக்கும் ஆர்வமிருக்கும் தானே. போனவருசம் தென்மராட்சியில இருக்கிற இல்வாரைக்குப் படையெடுத்தவை எல்லாரும் இந்தமுறை ஆரியகுளத்துக்கு போய், செல்பி எடுத்து, தங்கட பிறவிப் பயனைத் தீர்க்கத் தொடங்கி இருக்கினம். ஒவ்வொருநாளும் பின்னேரம் ஆரியகுளத்தில கூட்டம் சும்மா அள்ளுது. பண்ணைக் கடற்கரைக்கு இருந்த மவுசில அரைவாசிக்கும் மேல ஆரியகுளம் தன்ரபக்கம் இழுத்துப் போட்டுது. நெடுக வீட்டுக்க அடைஞ்சு கிடக்காமல், இப்பிடி ஒரு பொழுதுபோக்கு இடத்துக்கு வந்து, நடந்து திரிஞ்சு, காத்து வாங்கி, நாலுபேரைக் கண்டு கதைச்சு,குடும்பத்தோட சந்தோசமாப் பொழுது போக்கிறது நல்ல விசயம்தான்.

ஆனால், எங்களுக்கு எங்க போனாலும் ஏதும் குறளித்தனம் செய்யாட்டி நித்திரை வராது கண்டியளோ. தண்ணிப் போத்தல், பால் பைக்கற்,சொப்பிங்பை, மாஸ்க், கடுதாசியள் எண்டு எல்லாக் கழிவையும் ஆரியகுளக்கரையில நைசா எறிஞ்சு போட்டு வந்தவை கனபேர். அப்பிடி அவை எறிஞ்ச கழிவுகள் எல்லாம் ஆரிய குளத்துக்க போய் அடைஞ்சால், நாலைஞ்சு நாளிலையே அந்தக் குளம் திரும்பக் குப்பையாப் போடும். பாசி பரவி, ஆகாயத்தாமரை படர்ந்து . மூக்கைப் பொத்துறவுக்கு மணம் வந்து ஆரியகுளம், நாறிய குளமா மாறிடும். பிறகு பழையபடி பண்ணைக் கடற்கரைப் பக்கமாக நாங்கள்போடுவம். ஆனால் ஆரியகுளம் அப்பிடியே குப்பைக்குளமாவே இருக்கவேண்டியது தான்.

ஒரு இடத்துக்கு போனால், அந்த இடத்தின்ர சுத்தம், சூழலுக்கு எங்களால ஒரு சிறு துரும்பளவு பிரச்சினைகூடவரக்கூடாது. தண்ணிப்போத்தல், பால் பைக்கற்,சொப்பிங்பை, மாஸ்க், கடுதாசியள் எண்டு நாங்கள் போடுற கழிவுகளை அதுக்கெண்டு இருக்கிற குப்பைத் தொட்டியளுக்க போட்டால் குறைஞ்சோ போடுவம். அதை மாதிரி முனிசிபல் கவுன்சிலும் ஆரியகுளத்தடியில குப்பைத் தொட்டியளைக் கொஞ்சம் கூடவா வைச்சால் ஆக்களுக்கு குப்பை போட வசதியா இருக்கும். கனக்கப் பிரச்சினையளுக்கு மத்தியில புதுசாக்கின குளத்தை எங்கட குப்பைக் குணத்தால திரும்ப நாறின குளமா மாத்தாமல் இருக்கிறது அங்க போய் பார்த்து ரசிக்கிற ஒவ்வொருத்தரின்ர கையிலயும் தான் இருக்கு.



- பட்சி

# குடியிருப்புக் காணிகளை காடுகள் ஆக்கக்கூடாது

## நாடாளுமன்றில் கூட்டமைப்பு கோரிக்கை

கொழும்பு, டிசெ.8

**காடுகள் பாதுகாக்கப்பட வேண்டும். ஆயினும் குடியிருப்புப் பகுதிகள் காடுகளாக அறிவிக்கப்படக்கூடாது.**

நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.


அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

குடியிருப்புப் பகுதிகள் காடுகளாக்கப்பட்டு அந்தப் பிரதேசங்கள் பின்னர்,வடக்கின் குடிப்பரம்பலை மாற்றும் முயற்சிகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

வவுனியா நெடுங்கேணியில் இது போன்ற குடிப்பரம்பலை மாற்றும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது - என்றார்.

அதற்குப் பதிலளித்த ராஜாங்க அமைச்சர் விமலவீர திஸாநாயக்க, அம்பாறை வட்டமடு பிரதேசத்தில் தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் நிலவும் காணிப்பிரச்சினை தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அது தொடர்பில் கவனமான அணுகுமுறை தேவை. இந்த இடத்தை தமிழ் மக்கள் மேய்ச்சல் நிலம் என்று கூறுகின்ற நிலையில் முஸ்லிம் மக்கள் வயல்நிலம் என்று கூறுகின்றனர் என்றார். (எ-இ)



# கட்சிகளின் சுயலாபத்துக்காக தோற்கடிக்கப்படும் சபைகள்

## சுரேஷ் விசனம்

யாழ்ப்பாணம்,டிசெ.8

கட்சிகளின் சுயநலத்தின் அடிப்படையிலேயே உள்ளூராட்சி சபைகள் தோற்கடிக்கப்படுகின்றன என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்களின் செயற்பாடுகளில் பிழைகளைக் கண்டு இருக்கலாம் அல்லது அவர்கள் நன்றாக செயற்படுகிறார்கள் என மக்கள் மத்தியில் அபிப்பிராயங்கள் ஏற்பட்டு இருக்கலாம். இவற்றை உடைக்க வேண்டுமாயின், அவர்களைத் தோற்கடிக்க வேண்டும். எனவே கட்சிகளின் சுயநலத்தின் அடிப்படையில் தான் அவை தோற்கடிக்கப்படுகின்றன. தங்களின் கட்சி சார்ந்த தேவைகளுக்காக தோற்கடிக்கின்றனர்.

உள்ளூராட்சி சபைகளின் காலம் ஏப்ரல் மாதமளவில் முடிவடையவுள்ள நிலையில், அதனை 6 மாதங்களுக்கோ, ஒரு வருடத்துக்கோ நீடிக்கக் கூடும். ஏனெனில் இன்றைய களச் சூழலில் அரசு புதிய தேர்தலை நடத்தும் நிலைக்குப் போகமாட்டாது. எனவே இந்தச் சூழலில் உள்ளூராட்சி சபைகளைத் தோற்கடித்து ஆங்காங்கு ஆணையாளரின் கீழ் சபைகள் கொண்டு வரப்படுமாயின் , அதைப் போன்ற ஒரு மோசமான நிலை இருக்காது. ஒட்டுமொத்தமாக அரசும் தாம் விரும்பியதைச் செய்யும். அதற்கு நாங்கள் களம் அமைத்துக் கொடுத்தவர்களாக இருப்போம். -என்றார். (ஒ-4)

# எரிவாயு விபத்து பெண் உயிரிழப்பு

கொழும்பு,டிசெ.8

சமையல் எரிவாயு விபத்துக் காரணமாக தீக்காயமடைந்த மூதாட்டி ஒருவர், சிகிச்சை பயனின்றி நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

மாத்தளை உடுபிஹில்லப் பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணே உயிரிழந்தார்.

கடந்தமாதம் 19ஆம்திகதி சமையல் எரிவாயு அடுப்பை பற்றவைக்க முயற்சித்த போது, அவரது உடலில் தீப்பிடித்துள்ளது. கடும் தீக்காயங்களுக்கு உள்ளான பெண், மாத்தளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சமையல் எரிவாயு நிறுவனம் மற்றும் நுகர்வோர் அதிகாரசபை ஆகியவற்றுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. (ஒ-4)

# யுபிலி கொண்டாட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.8

யாழ்ப்பாணம் கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தால் சர்வதேச கரித்தாஸ் நிறுவனத்தின் 70 ஆவது ஆண்டுநிறைவு விழா நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.கியூடெக் கரித்தாஸ் மண்டபத்தில் இடம்பெறும். (ஒ-4)

# மேன்முறையீடுகளுக்கான மாவட்ட ரீதியான சேவை

யாழ்ப்பாணம்,டிசெ.8

வட மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் அறிவித்தலுக்கு அமைவாக, மேன்முறையீடுகளை சமர்ப்பிக்க விரும்பும் அரச சேவை அலுவலர்களுக்கான மாவட்ட ரீதியான சேவை குறிப்பிடப்பட்ட நாள்களில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக இன்று புதன்கிழமை முல்லைத்தீவு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், எதிர்வரும் 15 ஆம் திகதி வவுனியா பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், எதிர்வரும் 22 ஆம் திகதி மன்னார் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், எதிர்வரும் 29 ஆம் திகதி கிளிநொச்சி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் ஆகியவற்றில் மேன்முறையீடுகளைச் சமர்ப்பிக்கலாம்.

அதேவேளை டிசெம்பர் மாதத்துக்குள் சமர்ப்பிக்க உத்தேசிக்கும் யாழ்ப்பாண மாவட்டத்துக்கான மேன்முறையீடுகளை, இல 393/48, கோயில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள வடக்கு மாகாணப் பொதுச்சேவை அலுவலகத்தில் திங்கட்கிழமைகளில் கையளிக்க முடியும் என்று செயலாளர் சி.திருவாகரன் அறிவித்துள்ளார். (ஒ-4)

# மாந்தை கிழக்கு, துணுக்காய் பகுதிகளில் புதிதாகக் காணிகளை அபகரிக்க முயற்சி

## ரவிகரன் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, டிசெ. 8

முல்லைத்தீவு மாவட்டத்தில் மேலும் 23 ஆயிரத்துக்கும் அதிகமான ஏக்கர் காணிகளை அபகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முல்லைத்தீவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்கனவே 32 ஆயிரத்து 110 ஏக்கர் காணிகளை வனவளத் திணைக்களம் அபகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படும் நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வனவளத் திணைக்கள அதிகாரி எஸ்.ஜி.சுனில் ரஞ்சித், காடுபேணல் சட்டத்தின்கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காய் மற்றும் மாந்தை கிழக்கு பிரதேசங்களில் தம்மால் புதிதாக ஒதுக்கக் காடுகளாக 23 ஆயிரத்து 803 ஏக்கர் காணிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன என்றும் அவ்வாறு ஒதுக்கக் காடுகளாக அடையாளம் காணப்பட்டுள்ள குறித்த காணிகளை தமக்கு விடுவித்துத் தரவேண்டுமென, முல்லைத்தீவு மாவட்டசெயலர் கதிர்காமுத்தம்பி விமலநாதனை எழுத்துமூலம் கோரியுள்ளார்.

போர் மௌனிக்கப்பட்ட பின்னர், முல்லைத்தீவு மாவட்டத்தில் பல திணைக்களங்களின் மூலமாக தமிழ் மக்களுடைய நிலப்பரப்புகள் அபகரிக்கப்படுகின்றன.

குறிப்பாக மாந்தை கிழக்குப் பிரதேச செயலகப் பிரிவில், சிராட்டிகுளம் பகுதியில் 15 ஆயிரத்து 688 ஏக்கர் காணியும், நட்டாங்கண்டல் பகுதியில் 678 ஏக்கர் காணியையும் அபகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதேவேளை துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட அமைதிபுரம் என்னும் பகுதியில் 2 ஆயிரத்து 431 ஏக்கர் காணியும், துணுக்காய் பிரதேச செயலகப்பிரிவிலுள்ள ஏனைய பகுதிகளிலிருந்து 5 ஆயிரத்து 6 ஏக்கர் காணியும் வனவளத்திணைக்களத்தால் அபகரிக்கப்படவுள்ளன என்று தெரிகின்றது.

இந்தக் காணிகள் யாவும் ஏற்கனவே எமது தமிழ் மக்களுடைய குடியிருப்புக் காணிகளாகவும், எமது மக்களுக்கு வழங்கப்பட்ட விவசாயக் காணிகளாகவும்தான் இருந்தன. எமது தமிழ் மக்கள் தமது வாழிடங்களிலிருந்து இடம்பெயர்வதற்கு முன்னர் பயன்படுத்திய காணிகள் தற்போது சிறிய பற்றைகள், புதர்கள் வளர்ந்த இடங்களாக காட்சி தருகின்றன. அவ்வாறான இடங்களைக்கூட விட்டுவைக்காது வனவளத் திணைக்களத்தினர் அபகரிப்புச் செய்கின்றனர். இவர்களின் இந்தப் போக்கு மாற வேண்டும். இந்த அத்துமீறிய அபகரிப்புக்களுக்கு எதிராக அனைவரும் ஓரணியில் இணைந்து குரல்கொடுக்க வேண்டும் என்றார். (ம-246)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கொரோனாவை ஒழிக்க தயாராகிறது சுவிங்கம்!

கொழும்பு, டிசெ.8

கொரோனா வைரஸைக் கொல்லும் "சுவிங்கம்" ஒன்றை அமெரிக்க விஞ்ஞானிகள் தயாரிக்கின்றனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

கொரோனா வைரஸ் உலகை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் நிலையில், அதைக் கட்டுப்படுத்தும் வழிகள் குறித்த ஆய்வில் ஆராய்ச்சியாளர்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். கொரோனா வைரஸை அழிக்கும் "சுவிங்கம்" ஒன்றைத் தயாரிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று அமெரிக்காவின் பென்சில்வேனிய பல்கலைக்கழகத்தின் ஆய்வதிகாரி ஹென்றி டேனியல் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

கொரோனா வைரஸ், மனிதர்களின் உமிழ்நீர் சுரப்பிகளில் பெருக்கமடைகிறது. இந்தநிலையில் கொரோனாவால் பாதிக்கப்பட்ட ஒருவர், தும்மும்போது, இருமும்போது, பேசும்போது வைரஸ் அவர் வாயிலிருந்து வெளியேறி, மற்றவர்களை அடையக் கூடும்.

புதிய சுவிங்கம், கொரோனா வைரஸ் உருவாகும் இடத்திலேயே அதனை அழித்து விடும். இதற்காக, தாவரத்தில் இருந்து பெறப்படும் 'ஏசி இ2' என்ற புரதம் பயன்படுத்தப்படுகிறது. தற்போது கொரோனாநோயாளிகளின் உமிழ் நீர் மாதிரியில் இதனை பரிசோதித்தபோது அது நல்ல பயனைக் கொடுத்துள்ளது- என்றார். (எ-இ)

# மியான்மர் தொடர்பாக மௌனம் காக்கக்கூடாது!

## ரணில் வலியுறுத்து



கொழும்பு, டிசெ.8

மியான்மர் விவகாரம் தொடர்பில் இலங்கை மௌனம் காக்கக்கூடாது. இது விடயத்தில் துரிதமான செயற்பாடுகள் அவசியம்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

நேற்று நாடாளுமன்றத்தில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மியான்மர் நிலைவரம் தொடர்பில் அரசின் கவனத்தை ஈர்க்க விளைகின்றேன். ஆங் சாங் சூச்சி உள்ளிட்டவர்களுக்கு சிறை தண்டனை வழங்கப்பட்டுள்ளது. மியான்மரில் நடைபெற்ற தேர்தலில் ஆங் சாங் சூச்சிதான் வெற்றி பெற்றார். ஜனநாயகத்தை ஏற்படுத்தியவர் அவரே.

மியான்மர் தொடர்பில் ஆசிய நாடுகள்கூட துரிதமாகச் செயற்பட்டுள்ளன. எனவே, இலங்கை மௌனம் காக்கக்கூடாது. மியான்மர் தொடர்பில் கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்- என்றார்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, "ஆங் சாங் சூச்சி உள்ளிட்டவர்கள் சிறையில் அடைக்கப்பட்டமை வேதனையளிக்கின்றது. ஆனாலும் தவறிழைத்ததால்தான் சிறை வைக்கப்பட்டுள்ளார் என இராணுவ ஆட்சி கூறுகின்றது. எந்த நாடாக இருந்தாலும் நாம் இராணுவ ஆட்சிக்கு எதிர்ப்பு. நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு நாம் ஏன் எதிர்ப்பை வெளியிட வேண்டும்? - என்றார்.

இது தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவித்த ரணில், தேர்தலில் சூச்சியின் கட்சிதான் வெற்றி பெற்றது. ஆட்சியைப் பொறுப்பேற்க முன்னர் இராணுவம் கைப்பற்றி விட்டது. இராணுவத்தால் நியமிக்கப்பட்ட தீர்ப்பாயத்தால்தான் குற்றமிழைக்கப்பட்டார் எனக் கூறப்படுகின்றது - என்று சுட்டிக்காட்டினார். (எ-44)

# விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்.டிசெ.8

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் விஞ்ஞானமாணி (Bachelor of Natural Sciences) கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தக் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 18 வயதுக்கு மேற்பட்டவராக இருப்பதுடன், க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கணிதம் மற்றும் உயிரியலில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை www.ou.ac.lk என்னும் இணையத்தள முகவரியில் பிரவேசித்து, எதிர்வரும் ஜனவரி மாதம் 14 ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும்.

மேலதிக விவரங்களுக்கு யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம், பிறவுண்வீதி, கொக்குவில் எனும் முகவரியூடாகவும், 021 2223374 தொலைபேசியூடாகவும் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்க முடியும் என்று யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ-4)

# இரசாயன உர இறக்குமதிக்கு அனுமதி: கிளைபோசேட் பாவனைக்குத் தடை

## வெளியானது வர்த்தமானி

கொழும்பு,டிசெ.8

சேதன, சேதனமற்ற மற்றும் பொஸ்பரஸ் உரங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதியளித்தும், கிளைபோசேட் பாவனைக்குத் தடை விதித்தும் அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற அமைச்சரவையில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக வெளியிடப்பட்ட வர்த்தமானியின்படி இரசாயன உர இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டது. இதற்கு பல்வேறு தரப்பினர்களும் எதிர்ப்பு வெளியிட்டிருந்தனர். விவசாயிகள் உள்ளிட்ட எதிர்க்கட்சியினர் போராட்டங்களையும் முன்னெடுத்திருந்தனர்.

இந்த நிலையில் இரசாயன உரங்களை இறக்குமதி செய்வதற்கு தடை விதித்து, வெளியிடப்பட்ட வர்த்தமானிஅறிவித்தலை இரத்துச்செய்ய அரசு தீர்மானித்தது.

அதற்கமைவாக சுமார் 7 மாதங்களாக இரசாயனப் பசளை இறக்குமதிக்கு விதிக்கப்பட்டிருந்த தடை, கடந்தமாதம் 24 ஆம் திகதி நீக்கப்பட்டிருந்தது. இது தொடர்பிலான விசேட வர்த்தமானி அறிவிப்பே வெளியிடப்பட்டுள்ளது. (ஒ- 4)

# பிள்ளையார் பெருங்கதை

வட்டுக்கோட்டை, டிசெ.8

வட்டுக்கோட்டை உடுக்கியவளை ஸ்ரீமகா கணபதிப்பிள்ளையார் ஆலய பெருங்கதைப் படிப்பு முடிவு நாளை மறுதினம் வியாழக்கிழமையும், 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்டம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தில் தேங்காய் புதைக்கும் வைபவமும் இடம்பெறும்என்பதைஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ஒ-ரீ)

# சட்டத் துஷ்பிரயோகத்துக்கு அசாத்சாலி வழக்கே சான்று!

## சுதந்திர ஊடக இயக்கம் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.8

அசாத்சாலியின் வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பானது, சட்டம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளது என்பதை எடுத்துக்காட்டும் சிறந்ததொரு உதாரணமாகும் என்று சுதந்திர ஊடக இயக்கம் தெரிவித்தது.

அந்த இயக்கம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அதில் உள்ளதாவது

தான் வெளியிட்ட கூற்று தொடர்பில் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற நடவடிக்கைகள் முடியும் வரை சிறையில் அடைக்கப்பட்டிருந்த அசாத்சாலி, சுமத்தப்பட்டிருந்த அனைத்துக் குற்றச்சாட்டுக்களிலிருந்தும் விடுதலை செய்யப்பட்டமையானது அரசியல் அதிகாரங்கள் (பலம் வாய்ந்தவர்கள்) சட்டத்தைத் துஷ்பிரயோகம் செய்யும் செயற்பாட்டின் ஒரு நிகழ்வு எனச் சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மேற்கோள்காட்டி, தடுப்புக்காவலில் இருந்த அசாத்சாலியின் மீது நீதிமன்றத்தில் முன் குற்றஞ்சாட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். பிணை வழங்கப்படாத காரணத்தால் கிட்டத்தட்ட எட்டு மாதங்கள் அவர் சிறையில் இருக்க வேண்டியதாயிற்று. கடந்த காலங்களில் பல சமூக ஆர்வலர்கள், கலைஞர்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் அரசியல் அதிகாரங்களின் சட்ட சீர்கேடுகள் (சட்ட துஷ்பிரயோகம்) காரணமாக அநீதியான வகையில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்கள் குறித்த சமூகத்தின் மத்தியில் காணப்படும் கருத்துக்கள் தொடர்பில் அரசு தனது கவனத்தைச் செலுத்தவில்லை என்பதும் இங்கு குறிப்பிட வேண்டிய விடயமாகும்.

அசாத்சாலி கைது செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஊடகங்களுக்கு வழங்கிய கருத்துக்களில் அசாத்சாலியின் கைது நடவடிக்கையை ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புபடுத்தி கருத்துத் தெரிவித்தார். இந்த அனைத்துச் சம்பவங்களையும் கூர்ந்து, அவதானிக்கும்போது, அரசியல் அதிகாரத்துக்கே எந்த வித தயக்கமோ கூச்சமோ இன்றிச் சட்டத்தை துஷ்பிரயோகம் செய்ய இந்நாட்டு அரசியல் பலம்வாய்ந்தவர்கள் முனைகின்றமை தெட்டத்தெளிவாகக் கண்டுகொள்ள முடியுமாக உள்ளது. இதுபோன்ற நிகழ்வுகளின் வளர்ச்சிப்போக்கு எதிர்காலத்தில் அச்சுறுத்தலாகவும் மற்றும் கருத்துச் சுதந்திரத்துக்கு சவாலாகவும் அமையக் கூடும் என சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது. மேலும் இது தொடர்பில் வெளிப்படையான மற்றும் பரந்த சமூகக் கருத்தாடல்களை உருவாக்க வேண்டியதன் அவசியத்தையும் இங்கு வலியுறுத்துகிறது - என்றுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடன் பிரச்சினைக்காக மண்டியிட மாட்டோம்!

மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு

**கொழும்பு. டிசெ.8**

**நாட்டின் கடன் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, வெளிநாட்டு நிறுவனங்களிடம் மண்டியிட வேண்டிய அவசியம் இலங்கைக்கு இல்லை என மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.**

கொழும்பில் இலங்கை வர்த்தக சபையினால் நேற்று ஏற்பாடு செய்யப்பட்ட வர்த்தக மன்றத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது தனியார் வணிக நிறுவனமொன்று அதிக கடன் நெருக்கடியை எதிர்கொள்ளும் போது, முதிர்வு காலத்தை நீடிப்பதற்கும் வட்டி வீதங்களைக் குறைப்பதற்கும் முயற்சிக்கும்.

வெளிநாட்டுக் கடனைக் குறைப்பதற்கும், உள்நாட்டுக் கடனை அதிகரிப்பதற்கும் கடன் வழங்குபவர்களுடன் குறித்த வணிக நிறுவனத்தால் பேச்சு நடத்தப்படும். கடன் விடயத்தில் உள்ள பாதிப்புக்களை குறைக்க இலங்கை அதையே செய்கிறது.

தற்போது நாடு கடன் நிலைத்தன்மைக்கான பாதையில் இருக்கின்றது. இலங்கை கடன்களை மட்டும் பெற்றுக்கொள்வதில் இருந்துவிலகி, கடன் அல்லாத வரவுகளை உருவாக்கும் நோக்கில் நகர்கின்றது. - என்றார். (எ-இ)



## இடியனுடன் இருவர் கைது

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உமையாள்புரம் பகுதியில் இடியன் துப்பாக்கியுடன் இரண்டு நபர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

கிளிநொச்சி பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய கிளிநொச்சி பொலிஸாரால் இவர்கள் கைதுசெய்யப்பட்டனர். (யு-113)

## வாழ்வுரிமை இயக்கத் தலைவர் ரி.ஐ.டியினரால் நேற்று விசாரணை

பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவின் கொழும்புத் தலைமையக அறிவுறுத்தலுக்கு அமைவாக பிரிவின் வவுனியா கிளையினர், தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரனிடம் மன்னாரில் உள்ள அவரது அலுவலகத்தில் வைத்து நேற்று விசாரணை நடத்தினர்.

கடந்தகால சிவில் சமூக செயற்பாடுகள், நடத்தப்பட்ட நிகழ்வுகள் தொடர்பாகவும் குறிப்பாக மாவீரர் தின நிகழ்வுகள் சம்பந்தமாகவும் பல்வேறு கோணத்தில் கேள்விகள் தொடுத்து சுமார் இரண்டரை மணி நேரம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன என்று அவர் தெரிவித்தார்.

குறித்த விசாரணைகள் ஊடாக எம்மை சிவில் சமூக செயற்பாடுகளிலிருந்து எமது ஜனநாயக குரல்வளையை நசுக்கும் விதமாகவே அவர்களின் கேள்விகள் அமைந்திருந்தன என்றும் அவர் தெரிவித்தார்.

சிவில் அமைப்புக்களை வலுப்படுத்த வேண்டும் என்று சர்வதேச அரங்கில் ஜனாதிபதி கூறுகிறார். ஆனால், மறுபுறத்தில் சிவில் அமைப்புக்களை நசுக்க முனைகின்றன அரசின் புலனாய்வு அமைப்புகள்.

ஆகவே அரசின் இவ்வாறான நெருக்கடிகளைக் கண்டு நாம் அச்சப்படப்போவதில்லை. இவ்விதமான விசாரணைகள் எமக்கு புதியவை அல்ல.

எனவே எமது சமூக பணி என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-56)

## வெள்ளத்தால் மறைந்தது வீடு

சாவகச்சேரி,டிசெ.8

வெள்ளத்தால் சூழப்பட்டிருந்த ஓலை வீடு முழுமையாகச் சரிந்தது. இதனால் 5 பேர் கொண்ட குடும்பம் நிர்க்கதியாகியுள்ளது.

மந்துவில் கிழக்கு கரம்பைக்குறிச்சி மேற்குப் பிரதேசத்தைச் சேர்ந்த குடும்பமே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் பெய்த மழையால் வீட்டைச்சுற்றி வெள்ளம் தேங்கியிருந்தது. அதனால் வீடு ஊறி ஈரமாகியிருந்தது.

நேற்றுமுன்தினம் பகல் திடீரென வீடு சரிந்து வீழ்ந்துள்ளது. அயலவர்கள் வீட்டில் உள்ள பொருள்களை மீட்டு, அந்தக் குடும்பத்தினரை அயல் வீடொன்றில் தங்க வைத்துள்ளனர். (ஒ-49)



## சுண்டிக்குளம் தேசிய வனத்தின் நிலைபேறான அபிவிருத்தி ஆய்வு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திண்ணை குழுமம் மற்றும் சி.சி. எச் நிறுவனம் ஒன்றிணைந்து முன்னெடுக்கவுள்ள சுண்டிக்குளம் தேசிய வனத்தின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கிலான உயிர் பல்வகைமை ஆய்வு முன்னெடுப்பின் ஆரம்ப நிகழ்வு யாழ்ப்பாணம் திண்ணை விடுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

சி.சி.எ. நிறுவனத்தின் நிறுவுநர் ரீ.ரீ. மயூரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, திண்ணை குழுமத்தின் தலைவர் ஞானம் ஜெயசீலன், விஞ்ஞானப் பீடாதிபதி பேராசிரியர் பு.ரவிராஜன், விவசாய பீடாதிபதி கலாநதி எஸ்.வசந்தரூபா, ஆய்வுக் குழுவின் இணைப்பாளர் பேராசிரியர் க.கஜபதி, விவசாய ஆய்வு நிலைய பணிப்பாளர் எஸ்.ராஜேஸ்கண்ணா, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர் இரட்ணம் செந்தில்மாறன், வனவள பாதுகாப்புத் திணைக்களப் பிரதிநிதிகள், விரிவுரையாளர்கள், ஆய்வாளர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ம)

## 34 குடியிருப்புக்களுக்கு சிவப்பு எச்சரிக்கை

சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கையின் போது, 34 குடியிருப்பாளர்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினர் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினர், பொலிஸார், உள்ளூராட்சிசபையினர் ஆகியோருடன் இணைந்து டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நேற்றுமுன்தினம் 350 இடங்களில் தரிசிப்புகளை மேற்கொண்டபோது 188 இடங்களில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக்கூடிய நீர் ஏந்து பொருள்கள் காணப்பட்டன. 29 இடங்களில் டெங்குக் குடம்பிகளும் காணப்பட்டன. சுகாதாரப் பகுதியினரின் அறிவுறுத்தல்களுக்கு அமைய 154 குடியிருப்பாளர்கள் தமது காணிகள் மற்றும் குடியிருப்புக்களில் காணப்பட்ட நீர் ஏந்து பொருள்களை அப்புறப்படுத்தி உடனடியாகத் துப்புரவு செய்துள்ளனர், இதனையடுத்து 34 குடியிருப்பாளர்களுக்கு இரண்டு வாரங்கள் கால அவகாசம் வழங்கும் சிவப்பு அறிவித்தல் ஒட்டப்பட்டுள்ளது. அதேவேளை இன்று புதன்கிழமை மீசாலை கிழக்கிலும், நாளை வியாழக்கிழமை மீசாலை வடக்கிலும் விசேட டெங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-49)




நாடாளுமன்றத்தில் அரசின் வன்முறைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்றத்தைப் புறக்கணித்து, நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று இரண்டாவது நாளாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ஊ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கையில் வெண்ணெய் இருக்க...!

நில வளமும்இல்லை, நீர் வளமும் இல்லை. பச்சையத்தைத் தொலைத்து நிற்கும் மணல் மேடுகளும் எண்ணெய் வளமும் நிரம்பிய வெறும் வறண்ட பாலைவனக் கட்டாந்தரைகளை மட்டுமே கொண்டுள்ள தேசம்தான் ஐக்கிய அரபு அமீரகம். பெற்றோலைக்காட்டிலும் அங்கு தண்ணீரின் விலை பல மடங்கு. அப்படிப்பட்ட ஒரு நாடு இன்று விவசாயத்தில் தன்னிறைவு கண்டுள்ளது என்றால், அதை உங்களால் நம்ப முடியுமா? நம்பித்தான் ஆகவேண்டும். விவசாயத்துக்காகப் பெரும் தொட்டிகளை அமைத்து – அவுஸ்திரேலியா போன்ற தேசங்களில் இருந்து கப்பல்கள் மூலம் விவசாயத்துக்கு ஏற்ற மண்ணைக் கொண்டுவந்து அந்தத் தொட்டிகளை நிரப்பி, அதற்குள் விவசாயம் செய்து, இந்தத் தன்னிறைவு நிலையை ஐக்கிய அரபு அமீரகம் கண்டுள்ளது. பசுமை விவசாயத் திட்டம், சொட்டுநீர்ப் பாசனம் ஆகியவற்றிலும்தன்வானளாவியகட்டடங்களைப்போன்று வானுயர்ந்து நிற்கின்றது ஐக்கிய அரபு அமீரகம். நிச்சயமாக மலைக்கவைக்கும் சாதனைதான் இது.


ஏன் இந்த ஐக்கிய அரபு அமீரகப் புராணம்? எல்லாம் காரணமாகத்தான். இலங்கையின் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தற்போது ஐக்கிய அரபு அமீரகத்தில் முகாமிட்டுள்ளார். ஐக்கிய அரபு அமீரகத்தின் தலைநகரான அபுதாபியில் இடம்பெற்ற இந்து சமுத்திர மாநாட்டில் நேற்றுமுன்தினம் உரையாற்றிய அவர், தொற்றின் பின்னரான பொருளாதார மீட்சிக்கு வல்லரசு நாடுகள் வளர்ந்து வருகின்ற, பொருளாதாரத்தில் பின்னடைவு நிலையில் உள்ள நாடுகளுக்கு கடன் தவணை அவகாசங்களையும், மேற்கொண்டு கடன்களையும் வழங்க வேண்டும் –என்று வலியுறுத்தியுள்ளார். தன்னுடைய நாடு எப்படிப்பட்ட நாடு, தான் உரையாற்றிக் கொண்டிருக்கின்ற நாடு எப்படிப்பட்ட நாடு என்று ஒரு கணமாவது அவர் சிந்தித்திருந்தால் இலங்கையின் விடிவெள்ளி ஏதோவொரு மூலையில் தென்பட்டிருக்கும். துரதிர்ஷ்டவசமாக அதற்குரிய வாய்ப்புக்கள் இல்லைத்தான்.

வளமான மண்ணோ, நீர் வளமோ அற்ற ஐக்கிய அரபு அமீரகம் மேற்குறிப்பிட்டவாறு தன் கடின உழைப்பால் விவசாயத்தில் தன் இயலுமையை வலுவாக நிரூபித்திருக்கையில், அத்தனை வளங்களும் தேவைக்கு அதிகமாகவே உள்ள இலங்கையோ ஒரு இலட்சத்து 20 ஆயிரம் மெற்றிக்தொன் அரிசியை மியான்மரிடம் இருந்து இறக்குமதி செய்துள்ளது. எவ்வளவு பிற்போக்குத்தனமான விடயம் இது. எத்தனை தசாப்தகாலப் பின்னடைவில் நாம் நிற்கின்றோம் என்று எம்மை நாமே சுயபரிசீலனை செய்து கொள்ளவேண்டும்.

ஜனாதிபதி கோத்தாபய கோரிக்கை விடுத்ததைப்போன்று, தொற்றின் பின்னரான மீட்சிக்கோ அல்லது பொருளாதாரக் கட்டமைப்புக்கோ வல்லரசு நாடுகள் ஒன்றும் இலங்கைக்கு உதவப்போவதில்லை. காரணம், வல்லரசு நாடுகள் முதலில் தம்மைத்தான் கவனித்துக்கொள்ளும். ஆபிரிக்காவில் 5 வீதமான மக்களுக்கே கொரோனாத் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டிருக்கையில், அதுபற்றிய கரிசனை சிறிதும் இன்றி தத்தமது தேசங்களில் பூஸ்டர் டோஸ் ஏற்றுவதை முடுக்கிவிட்டிருந்ததே வல்லரசுகளின் ஆகப்பெரும் சாதனையாக இருக்கின்றது. இதிலிருந்தே வல்லரசு நாடுகளின் சுயநலப் போக்கு அப்பட்டமாக வெளிப்பட்டிருந்தது. ஆபத்தில் தானே நண்பன் யார் என்று அறியலாம்.

அத்துடன், கோத்தாபய வலியுறுத்தும் ''தொற்றின் பின்னரான'' என்ற நிலை அவ்வளவு துரிதகதியில் வந்துவிடப் போகும் விடயமுமல்ல. அல்பா, பீட்டா, காமா, டெல்டா என்றிருந்த திரிபுகள் தற்போது ஆகப்பெரும் அச்சநிலையான ஒமிக்ரோனில் வந்துநிற்கின்றது. இவ்வாறிருக்கையில், தொற்றின் பின்னரான என்ற வரையறை எப்போதிருந்து ஆரம்பமாகும் என்பது உலக சுகாதார ஸ்தாபனத்துக்கே தெரியாத கதைதான்.

மீன்பிடியையும் விவசாயத்தையும் உச்சஅளவில் பயன்படுத்தக்கூடிய சாத்தியப்பாடுகளில் இலங்கை எதைத்தான் சாதித்தது? இந்திய மீனவர்கள் இந்த நாட்டின் கடல் வளத்தைச் சுரண்டிச் செல்கின்றனர். எரிந்த கப்பல்களின் எச்சங்களும், கடலில் கலந்த கழிவு எண்ணெய்களும் கணக்கில்லாத பொருளாதாரப் பின்னடைவைக் கண்முன் கொண்டு வந்தன. செயற்கை உரம், இயற்கை உரம், உர ஊக்கி என்று ஏதேதோ நாடகமாடி இன்று அதிலும் வெற்றிகாணவில்லை. இராணுவம் ஒன்றையே சர்வமுமாகக் கொண்டிருந்தால் இப்படித்தான். இன்று ஐக்கிய அரபு அமீரகம் சாதனைகளில் மலைக்க வைப்பதைப்போல இந்தப் பட்டியலில் நாளை நைஜீரியா, எதியோப்பியாவும்கூட இணைந்து கொள்ளலாம். ஆனால் அந்தப் பட்டியலில் இலங்கைக்கு எப்போதும் இடமிருக்கப்போவதில்லை என்பதுதான் யதார்த்தம். இருக்கின்ற வளத்தையும் வாடகைக்குக் கொடுத்துவிட்டு கையேந்தும் நாடுகளின் பட்டியலில் இலங்கையின் முதலிடத்தை இனிவரும் காலங்களில் எந்த நாட்டாலும் அசைக்க முடியாத நிலைக்கே சாத்தியங்கள் இருக்கும்.




# சீனா கைவிட்ட வடக்குத் தீவுகளை இந்தியாவிடம் கையளிக்கத் திட்டம்?

கொழும்பு, டிசெ.8



**வடக்கில் மூன்று தீவுகளில் முன்னெடுக்க விருந்த மின்னுற்பத்தித் திட்டங்களை சீனா கைவிட்டுள்ள நிலையில், அவற்றை இந்தியாவுக்கு வழங்குவதற்கு எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படவில்லை என்று அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.**

வடக்கிலுள்ள நெடுந்தீவு, அனலைதீவு மற்றும் நயினாதீவில் மின்னுற்பத்தி செயற்றிட்டத்தை ஆரம்பிக்க சீன நிறுவனம் திட்டமிட்டிருந்தது. எனினும், மூன்றாவது தரப்பொன்று பாதுகாப்புத் தொடர்பில் முன்வைத்த விடயங்கள் காரணமாகவே மேற்படி திட்டங்களை இடைநிறுத்துவதற்கு சீனா தீர்மானித்துள் ளது.

இந்த நிலையில் வடக்கில் மூன்று தீவுகளில் சீனா முன்னெடுக்கவிருந்த திட்டங்கள் இந்தியாவின் அதானி நிறுவனத்திடம் கையளிப்பதற்கு அமைச்சரவையில் ஆராயப்பட்டதா என அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டின் போது நேற்றுக் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த அவர், அவ்வாறானதொரு முடிவு எடுக்கப்படவில்லை என அமைச்சர் அறிவித்தார்.

உரப்பிரச்சினையால் சீனாவுடனான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளதா? என எழுப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அவர், ''சேதனப் பசளை விவகாரத்தால் இரு நாடுகளுக்குமிடையிலான உறவில் எந்தவித பாதிப்பும் ஏற்படாது என சீனத் தூதுவர் அறிவித்துள்ளார். இது வர்த்தகம் சார் பிரச்சினை. நீதிமன்ற நடவடிக்கை தற்போது இடம்பெற்றுவருகின்றது. இரு நாடுகளுக்கிடையிலான இராஜதந்திர உறவில் எந்தவித சிக்கலும் இல்லை" - என்றார். (எ-44)

# 2022 ஜனவரியில் ரணில் பிரதமர்?

2022 ஜனவரியில் பிரதமர் பதவியில் மாற்றம் வரவுள்ளது என்றும்-புதிய பிரதமராக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்படவுள்ளார் என்றும் - வெளியாகியுள்ள தகவல்களை அரசு நிராகரித்துள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று நடைபெற்றது. 2022 ஜனவரியில் பிரதமர் பதவியில் மாற்றம் வரவுள்ளது என்றும், பஸில் ராஜபக்ச அல்லது ரணில் விக்கிரமசிங்க புதிய பிரதமராக நியமிக்கப்படவுள்ளனர் எனவும் தகவல் வெளியாகியுள்ளது. சர்வதேச உறவு மற்றும் கடன்களைக் கருத்திற்கொண்டே ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்படவுள்ளார் எனவும் கூறப்படுகின்றது. இது உண்மையா? என அமைச்சரவை இணைப்பேச்சாளரான அமைச்சர் ரமேஸ் பத்திரணவிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு பதிலளித்த அவர், "இது அடிப்படையற்ற கேள்வி. அவ்வாறு எந்தவொரு கலந்துரையாடலும் இடம்பெறவில்லை. நீங்கள் புதியதொரு செய்தியை உருவாக்கியுள்ளீர்கள். ஆனாலும் அதில் உண்மை இல்லை." என்று தெரிவித்தார். (எ-44)

# அடையாள இலக்கத்துடன் இனி பிறப்புச் சான்றிதழ்

## அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு,டிசெ.8

அடையாள இலக்கத்துடன் கூடிய பிறப்புச் சான்றிதழை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச சமர்ப்பித்த யோசனைக்கு, அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதற்கமைவாக எதிர்காலத்தில் புதிய பிறப்புச் சான்றிதழ் வழங்கும்போது இந்த அடையாள இலக்கம் வழங்கப்படும்.

இந்த அடையாள இலக்கத்தை, தேசிய அடையாள அட்டை தயாரிக்கப் பயன்படுத்துவதற்கும், பிறப்பு முதல் இறப்பு வரையிலான அனைத்துச் செயற்பாடுகளின்போது பொது மற்றும் தனியார்துறை சேவைகளை அணுகுவதற்கும் வசதியாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதியோருக்கு வீட்டில் தடுப்பூசி

மன்னார்,டிசெ.8
மன்னார் மாவட்டத்தில் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளாத முதியவர்களின் வீடுகளுக்கு நேரடியாகச் சென்று தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.
எனவே இதுவரை தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் 0232222916 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு. முற்பதிவு செய்ய முடியும் என்று மன்னார் சுகாதார சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஒ-4)

# சோலைநகர் பகுதியில் வெடிபொருள்கள் மீட்பு



**கிளிநொச்சி, டிசெ. 8**
**கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பரந்தன் சோலைநகர் பகுதியில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையில் பெருமளவு வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.**

பரந்தன் - சோலைநகர் பகுதியில் கடந்த சனிக்கிழமை ஏற்பட்ட வெடிப்புச் சம்பவத்தை அடுத்தே இந்தத் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. கிளிநொச்சி நீதிமன்றத்தின் அனுமதியுடன் இந்த வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. (ம-113)

## நாடாளுமன்றக் காணொலிகள் ஊடகங்களுக்கு சென்றது எப்படி?

### விசாரணை நடத்தும்படி ஆளும்கட்சி கோரிக்கை

கொழும்பு, டிசெ. 8
கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்ற அறைக்குள் இடம்பெற்ற சம்பவங்கள் அடங்கிய காணொலியை தனியார் ஊடகங்களுக்கு வெளியிட்டமை தொடர்பில் விசாரணை நடத்துமாறு ஆளும்கட்சி உறுப்பினர் பிரமித பண்டார தென்னகோன் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.
சபாநாயகர் இருக்கையின் இடது புறத்தில் உள்ள இடத்தில்இருந்து கையடக்கத் தொலைபேசி மூலம் நாடாளுமன்ற அறைக்குள் நடந்த சம்பவங்கள் காணொலியாகப் படம் பிடிக்கப்பட்டு. தனியார் தொலைக்காட்சிகளில் வெளியிடப்பட்டன. இது தொடர்பிலேயே விசாரணை நடத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம)

## பழைமையான கிணறு மண்ணுக்குள் புதைகிறது

சாவகச்சேரி,டிசெ.8
சாவகச்சேரி அல்லாரைப்பகுதியில் சுமார் 40 வருடங்கள் பழைமை வாய்ந்த கிணற்றைச் சுற்றியுள்ள மணல் உள்நோக்கிச் சென்றவண்ணம் இருப்பதால் அயலில் உள்ளவர்கள் அச்சமடைந்துள்ளனர்.
கடந்த மூன்று தினங்களாக மணல் உள்நோக்கிச் செல்வதால், அயலில் உள்ள நிரந்தரக் குடியிருப்பின் அருகே உள்ள மண்ணும் உடைந்து உள்நோக்கிச் சென்றுள்ளது.
கிணற்றைச் சுற்றிக் காணப்பட்ட மண் உடைந்து செல்வதால் சிறு பிள்ளைகளின் பாதுகாப்புக் கருதி கிணற்றைச்சுற்றி வேலி அமைக்குமாறு பிரதேச இடர்கால முகாமைத்துவ அலகினர் அறிவித்துள்ளனர். (ஒ-4-9)

*வவுனியா தெற்கு*

## தமிழ்ப் பிரதேசசபையின் பாதீடு வாக்கெடுப்பின்றி நிறைவேற்றம்

வவுனியா, டிசெ. 8
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வசமுள்ள வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான பாதீடு வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டது.
வவுனியா தெற்குதமிழ் பிரதேச சபையின் மாதாந்த அமர்வு தவிசாளர் த.யோகராஜா தலைமையில் நேற்று இடம்பெற்றது. இதன்போது 30 உறுப்பினர்களில் 23 உறுப்பினர்கள் சபைக்கு சமுகமளித்திருந்தனர்.
ரெலோ கட்சியின் இரு உறுப்பினர்கள் பாதீட்டுக்கு எதிராக கருத்துக்களை முன்வைத்ததுடன் வாக்கெடுப்புக்குச் செல்லுமாறு தெரிவித்திருந்தனர். ஆயினும் அநேகமான உறுப்பினர்கள் பாதீட்டுக்கு ஆதரவான கருத்துக்களைத் தெரிவித்தனர். இதனால் பாதீடு வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டது. (ம-110)

## திறன் வகுப்பறைகளுக்கு கணினி,விரலி கையளிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.8
'ஈ' கல்வித் தொண்டு நிதியத்தின் அனுசரணையுடன், அனலைதீவில் உள்ள மூன்று பாடசாலைகளின் திறன் வகுப்பறைகளுக்கு கணினி மற்றும் விரலிகள் கையளிக்கும் நிகழ்வு நாளை வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.
அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயம், வடலூர் அதகவித்தியாலயம், அனலைதீவு தெற்கு அ.த.க.வித்தியாலயம் ஆகியவற்றுக்கு இவை வழங்கப்படவுள்ளன.
நிகழ்வில் வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் தி.ஞானசுந்தரன், ஊர்காவற்றுறை கோட்டக் கல்விப் பணிப்பாளர் மு.சத்தியசீலன், ஈ கல்வி தொண்டு நிதியத்தின் தலைவர் செ.முரளிதரன் ஆகியோர் கலந்து கொள்வர். (ஒ-4-9)

## பிரியந்த குமார கொலை: பிரதான குற்றவாளி கைது



கொழும்பு, டிசெ. 8
பாகிஸ்தானில் முகாமையாளர் பிரியந்த குமார படுகொலை செய்யப்பட்ட வழக்கில், மிகவும் தீவிரமாகத் தேடப்பட்ட முதன்மைக் குற்றவாளி கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டார் என்று பஞ்சாப் பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.
சந்தேகநபர் பில்லி என்ற பெயரால் அறியப்படும் இம்தியாஸ் என அடையாளம் காணப்பட்டதுடன், அவர் பிரியந்த குமாரவை சித்திரவதை செய்து கொலைச் செய்யப்படுவதற்கு முக்கிய காரணமாக இருந்தவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. ராவல்பிண்டிக்கு செல்லும் பேருந்தில் வைத்து குற்றஞ்சாட்டப்பட்டவர் கைது செய்யப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## மதவாதக் குற்றங்களை ஒழிப்பதற்கு அனைவரும் ஓரணியில் ஒன்றிணைக

### பேராயர் மல்கம் ரஞ்சித் அழைப்பு



கொழும்பு, டிசெ. 8
பாகிஸ்தானில் பிரியந்த குமார மிலேச்சத்தனமாகப் படுகொலை செய்யப்பட்டமைக்குக் கடும்கண்டனத்தைத் தெரிவித்துள்ள, பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை இவ்வாறான மதவாத - அடிப்படைவாதக் குற்றங்களை இல்லாதொழிப்பதற்கு அனைவரும் ஓரணியில் ஒன்றுதிரள வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளார்.
இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
பாகிஸ்தானில் அடிப்படைவாதிகளால் பிரியந்த குமார என்ற இலங்கைப் பிரஜை மிலேச்சத்தனமாக கொலை செய்யப்பட்டமை தொடர்பில் இரங்கலை தெரிவித்துக் கொள்கின்றோம். இந்தக் கொடூரமானதும் பயங்கரமானதுமான கொலையை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். அத்தோடு இதனால் பெரும் மனக்கவலைக்கு உள்ளாகியுள்ள குடும்பத்தாருக்கும் உறவினருக்கும் எமது இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மதத்தின் பெயரை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்படுகின்ற இவ்வாறான அடிப்படைவாதக் குற்றங்களால் ஏற்படுகின்ற பாதிப்புக்களை இல்லாதொழிப்பதற்கு அனைத்து நாட்டு தலைமைத்துவங்களும் கடுமையாக சட்டங்களை நடைமுறைப்படுத்தவேண்டும். மதத்தின் பெயரால் அடிப்படைவாதிகள் அவர்களது தனிப்பட்ட அல்லது அரசியல் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக மனிதர்களைக் கொலை செய்யுமளவிலான ஆபத்தான நிலைமை உலகில் வேறு எதிலும் இல்லை. இது மதங்களுக்கு ஏற்படுத்தப்படும் அவமதிப்பாகும். இவ்வாறான கொலையாளிகள் மற்றும் அவர்களுக்கு உதவி வழங்குபவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு, அவர்களுக்கு எதிராக கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதை நாம் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றோம் - என்றுள்ளது. (ம)

## பிரியந்தவின் குடும்பத்துக்கு இழப்பீடாக 25 இலட்சம் ரூபா

கொழும்பு, டிசெ. 8
பாகிஸ்தானில் படுகொலை செய்யப்பட்ட பிரியந்த குமாரவின் குடும்பத்துக்கு 25 இலட்சம் ரூபாவை நிவாரணமாக வழங்க இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது.
இது குறித்து அமைச்சரவையில் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
கடந்த 11 வருடங்களாக இந்த நாட்டுப் பொருளாதாரத்துக்குப் பிரியந்த குமார வழங்கிய பங்களிப்பை கருத்திற்கொண்டே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## வட மேல் மாகாண ஆளுநர் கொரோனாவால் உயிரிழப்பு

கொழும்பு,டிசெ.8
கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டிருந்த, வட மேல் மாகாண ஆளுநர் ராஜா கொல்லுரே உயிரிழந்தார்.இவர் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்தார்.
இவர் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் தலைவராகவும் செயற்பட்டிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணேசலிங்கன்
# மூத்த முற்போக்கு படைப்பாளி






முருகபூபதி

சுமார் அறுபதுக்கும் மேற்பட்ட நாவல்கள் பல சிறுகதைகள், கட்டுரை - விமர்சன நூல்கள் - சிறுவர் இலக்கியம் - பயண இலக்கியம் என நூறுக்கும் மேற்பட்ட நூல்களை தமிழ் இலக்கிய உலகத்துக்குத் தந்துள்ள கணேசலிங்கனின் மறைவு தமிழ் இலக்கிய உலகத்துக்குப் பேரிழப்பு.

இலங்கை வடபுலத்தில் உரும்பராயில் 1928ஆம் ஆண்டு மார்ச் மாதம் 9ஆம் திகதி கணேசலிங்கன் பிறந்தார். தனது 93ஆவது வயதில் கடந்த சனிக்கிழமை சென்னையில் காலமானார். தற்போதைய வயதிலிருந்து கணக்குப் பார்த்தாலும் வருடத்துக்கு ஒருபுத்தகம் எனப் பிறந்ததுமுதல் இன்று வரையில் எழுதியிருக்கின்றார் என்றும் கொள்ளலாம்.

### பல்தரப்பட்ட ஆளுமை

மூத்த தமிழ் அறிஞர் மு.வரதராசனும் இவரது நெருங்கிய நண்பர். மு.வ. மறைந்தபின்பு அவரது நினைவாகவும் ஒரு நூலை எழுதியிருக்கின்றார். செவ்வானம் நாவல் கைலாசபதியின் முன்னுரையுடன் வெளியானது. குறிப்பிட்ட நீண்ட முன்னுரையே பின்னாளில் தமிழ் நாவல் இலக்கியம் என்ற விரிவான நூலாகியது.

சர்வதேசப் புகழ்பெற்ற கவிஞர் பாப்லோ நெருடா (இலக்கியத்துக்காக நோபல் பரிசு பெற்றவர்) இலங்கை வந்த சமயம் அவரை வரவேற்கும் எழுத்தாளர்களின் கூட்டத்துக்குத் தலைமைதாங்கிச் சிறப்பித்த பெருமையும் கணேசலிங்கனுக்கு உண்டு. புனே திரைப்படக் கல்லூரியிலும் அவர் சிறிதுகாலம் பயிற்சி பெற்றவர். அங்கு பிரபல இயக்குநர் மிருணாள் சென் போன்றவர்களுடன் நட்புறவுகொண்டவர். கமல்ஹாஸன் நடித்து பாலுமகேந்திராவின் இயக்கத்தில் வெளியான கோகிலா (கன்னடம்) திரைப்படத்தின் தயாரிப்பு நிர்வாகியாகவும் இயங்கியிருக்கும் கணேசலிங்கன் - தமிழக சினிமா உலகின் கோலங்களை தமது 'கவர்ச்சிக்கலையின் மறுபக்கம்' என்ற நாவலில் சித்திரித்துள்ளார்.

### பல்தரப்பட்ட படைப்புக்கள்

அவுஸ்திரேலியாவில் பல்கலைக்கழகப் பிரவேசப் பரீட்சைக்கு தமிழும் ஒரு பாடம். தமிழ்மொழிப்பாடப் பரீட்சைக்கு தோற்றும் பல மாணவர்களுக்கு பெண்கள் தொடர்பாக வரும் நேர்முக - எழுத்துப் பரீட்சைகளுக்கு கணேசலிங்கனின் "பெண்ணடிமை தீர" என்ற நூல் உசாத்துணையாகப் பயன்பட்டது. இந்த நூலும், "குமரனுக்கு கடிதங்கள்", "குந்தவைக்கு கடிதங்கள்" முதலான நூல்களும் பல ஆயிரம்பிரதிகள் வாசகர் மத்தியில் சென்றுள்ளன.

சாரு மஜூம்தார் என்ற இந்திய சுதந்திரபோராட்ட வீரர், பின்னாளில் இடதுசாரி இயக்கங்களில் ஈடு பட்டு, நக்சல்பாரி என்ற ஆயுதப்போராட்ட இயக்கத்தை உருவாக்கியவர். அவரது சிந்தனையின் தாக்கத்தினால், கணேசலிங்கன் எழுதிய மண்ணும் மக்களும் என்ற நாவல் இந்திய அரசினால் தடைசெய்யப்பட்டது.

நிலமானிய சமூக ஒடுக்குமுறையைச் சித்திரித்தே மண்ணும் மக்களும் நாவலை எழுதினார். இலங்கையில் புரட்சி ஏதோ ஒரு வடிவத்தில் தோன்றும் வாய்ப்பு நேரலாம் என்பதை நீண்ட காலத்துக்கு முன்பே நாவலாக எழுதிக் காண்பித்தவர். ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகில் செ.கணேசலிங்கனின் சிறுகதைகள், நாவல்கள் பல முக்கியமானவை. தடம் பதித்தவை. ஆண்மையில்லாதவன் போன்ற இவரது பல சிறுகதைகள் குறிப்பிடப்பட வேண்டியவை. நாவல்களிலும் 'சடங்கு', 'செவ்வானம்', 'நீண்ட பயணம்', 'மண்ணும் மக்களும்' போன்றவை முக்கியமானவை. இவரது நாவல்களை வெறும் பரப்புரைப் படைப்புகளாக ஒதுக்கிவிட முடியாது. ட்ரோல்ஸ்ரோய், தாஸ்த்தாவஸ்கி போன்றவர்கள் தங்களது படைப்புகளில் கையாண்ட மதப் போதனைகளை வைத்து மட்டும் எவ்விதம் அவர்களது படைப்புக்களைக் கணிப்பிட முடியாதோ, அவ்விதமே செ.கணேசலிங்கனின் படைப்புகளில் ஊடுருவியிருக்கும் பொருளின் தீவிரத்தை வைத்து மட்டும் அவரது படைப்புகளை எடைபோட முடியாது.

இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் குமரன் பதிப்பகம் என்ற பெயரில் நூல் வெளியீட்டு நிறுவனத்தையும் நடத்திக் கொண்டு 'ப்ரொன்ட் லைன்' சஞ்சிகை ஆசிரியர் இந்து ராமின் நண்பராகவும் திகழ்ந்த கணேசலிங்கன், இந்து குழுமத்தின் நூலகத்திலும் சிறிது காலம் பணியாற்றினார்.

### மாக்சிய சிந்தனைவாதி!

தமிழில் அரசியல் சார்ந்த நாவல்களை எழுதும் ஆற்றல் மிக்கவராக இனங்காணப்பட்டவர். மாக்சிய சிந்தனைகளால் ஆகர்ஷிக்கப்பட்ட கணேசலிங்கன் சிறந்த மனிதநேயவாதி எனவும் விதந்து பேசப்படுபவர். ஆங்கிலத்திலும் நல்ல புலமைமிக்க கணேசலிங்கன், ஸ்ரிபன் செவாக் எழுதிய அறியப்படாத பெண்ணிடமிருந்து கடிதம் (Letter from an Unknown Woman) என்ற குறுநாவலை தமிழில் 'அபலையின் கடிதம்' என்ற பெயரில் மொழிபெயர்த்துள்ளார்.

கணேசலிங்கனின் முதலாவது நாவல் 'நீண்டபயணம்' வடமாகாண சாதி ஒடுக்குமுறையை சித்திரித்தது, மற்றுமொரு பிரசித்திபெற்ற நாவலான 'சடங்கு' பேராசிரியர் கா.சிவத்தம்பியின் முன்னுரையுடன் வெளிவந்து வாசகர்களின் கவனத்தைப் பெற்றது.

வெள்ளவத்தையில் இயங்கிய கணேசலிங்கனின் விஜயலக்ஷ்மி புத்தகசாலை 1983ஆம் ஆண்டுக் கலவரத்தில் முற்றாக எரிந்து நாசமாகியது. இலங்கையில் எழுத்தாளர்களுக்கும் வாசகர்களுக்கும் பெரிதும் உதவிய இந்த புத்தகசாலையை கொடியவர்களிடம் இழந்த போதிலும் சென்னையில் புகலிடம்பெற்று, ஈழத்து படைப்பாளிகளின் நூல்கள் தொடர்ந்து வெளிவருவதற்கு அயராமல் உழைத்தார்.

கொழும்பில் நீண்டகாலம் குமரன் மாத இதழை நடத்தினார். அவ்விதழ் கலை, இலக்கிய, அரசியல், அறிவியல் ஏடாக வெளியானது.

இலங்கையில் மிகுந்த கவனத்தைப் பெற்ற கவிஞரான புதுவை இரத்தினதுரை ஒரு காலத்தில் "வரதபாக்கியான்" என்ற புனைபெயரில் பல கவிதைகளை எழுதியதும் இந்த குமரன் இதழில்தான். ஹெலிகொப்டர் விபத்தில் இறந்த முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் அஷ்ரப், தான் குமரன் இதழ்களைத் தொடர்ந்து படித்தே அரசியல் அறிவு பெற்றதாக ஒரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஈழத்தின் முன்னோடி முற்போக்கு எழுத்தாளர் அ.ந.கந்தசாமி அந்திம காலத்தில் நோய்வாய்ப்பட்டிருந்த வேளையில் அவருக்கு அருகே இருந்து பலவிதத்திலும் பணிவிடை புரிந்த முன்மாதிரியாளர் இந்தக் கணேசலிங்கன்தான். அ.ந.கந்தசாமி எழுதிய வாழ்வுக்கு வழிகாட்டும் உளவியல் நூலான "வெற்றியின் இரகசியங்கள்" தமிழகத்தில் பாரி நிலைய வெளியீடாக வெளிவரக் காரணமாகவிருந்தார்.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் எழுத்தாளர் கூட்டுறவு பதிப்பக வெளியீடாக வந்த அ.ந.க.வின் 'மதமாற்றம்' நாடகம் நூலாக வெளிவரவும் கணிசமான ஒத்துழைப்பு நல்கியதோடு அந்த நூலுக்கு நல்லதொரு முகவுரையையும் எழுதியவர். அ.ந.க.வின் வெளிவராத நாவலான செ.க.வின் வசமிருந்த 'களனி வெள்ளம்' 1983ஆம் ஆண்டுக் கலவரத்தில் செ.க.வின் எரிந்த உடைமைகளுடன் எரிந்து போனதாகவும் அறியப்படுகிறது. இலங்கையில் கார்ல்மார்க்ஸ் நூற்றாண்டு கொண்டாடப்பட்ட வேளையில், கணேசலிங்கன் வழங்கிய ஆக்கபூர்வமான உதவிகளையும் ஒத்துழைப்புக்களையும் நேரடியாகக்கண்ட தோழர் என்.சண்முகதாஸன் அவரை மனம் திறந்து பாராட்டியுள்ளார்.

கணேசலிங்கன் பெண்ணடிமைத்தனத்துக்குத் திருக்குறள் விமோசனம் அளிக்கவில்லை என்பதை ஆய்வுமூலம் நிரூபிக்கும் நூல் ஒன்றையும் எழுதி, விமர்சகர்களின் கவனத்தை ஈர்த்தவர். பேராசிரியர்கள் க.கைலாசபதி, இந்திரபாலா உட்பட பல முன்னணி விமர்சகர்கள், ஆக்க இலக்கிய கர்த்தாக்களின் நூல்களை பதிப்பித்துமுள்ள கணேசலிங்கனின் மிகப்பெரிய பலம் அவரிடம் இயல்பாகவே குடிகொண்டிருந்த அமைதியும் அடக்கமும்தான். ஒருவகையில் அவர் ஒரு நிறைகுடம்.

எங்கள் முற்போக்கு இலக்கியக்குடும்பத்தின் மூத்த சகோதரர் செ.கணேசலிங்கன் அவர்களுக்கு சிரம்தாழ்த்திய அஞ்சலிகள்.

## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** மனதில் உற்சாகம் ஊற்றெடுக்கும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்னியம்அதிகரிக்கும். உங்கள் முயற்சிக்கு வாழ்க்கைத் துணையின் ஆதரவு கிடைப்பது மகிழ்ச்சி தரும். தாயின் உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**இடபம்:** புதிய முயற்சிகளை பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாக முடியும். வெளியூரில் அமைந்திருக்கும் பிரசித்திபெற்ற கோயில்களை தரிசிக்கும் வாய்ப்பு சிலருக்கு ஏற்படும்.

**மிதுனம்:** மகிழ்ச்சியானநாள். மனதில்தைரியம் அதிகரிக்கும். எடுத்தகாரியத்தைச் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும்.

**கடகம்:** முயற்சிகள் சாதகமாக முடியும். பிள்ளைகள் வகையில் சில சங்கடங்கள் ஏற்பட்டாலும் அதனால் பெரிய பாதிப்பு எதுவுமிருக்காது. சகோதரர்களால் செலவுகள் ஏற்படும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. பிற்பகலுக்கு மேல் பிள்ளைகள் பிடிவாதம் பிடிப்பார்கள். விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது.

**கன்னி:** பணவரவு திருப்தி தரும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. வாழ்க்கைத்துணையால் எதிர் [illegible] மனதில் [illegible] பட்டு நீங்கும்.

**துலாம்:** பிற்பகலுக்கு மேல் மனதில் உற்சாகம் ஏற்படும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தாய்வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடிவதற்கு வாய்ப்பு ஏற்படும். வெளியூர்ப் பயணங்களைத் தவிர்க்கவும்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சகோதரர்களுக்காக செலவு செய்ய நேரிடும். மற்றவர்களுடன் வீண் விவாதத்தில் ஈடுபட வேண்டாம். வாழ்க்கைத்துணையுடன் அனுசரித்துச் செல்வது நல்லது.

**தனுசு:** காலையில் வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். பிற்பகலுக்கு மேல் மனதில் உற்சாகம் அதிகரிக்கும். விறுவிறுப்பாகவும் பரபரப்பாகவும் செயற்படுவீர்கள். தாய்வழி உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும்.

**மகரம்:** எதிர்பாராத பணவரவு இருந்தாலும் திடீர் செலவுகளும் ஏற்பட்டு திக்குமுக்காட வைக்கும். அரசாங்கக் காரியங்கள் முடிவதில் இருந்து வந்த இழுபறி நிலை மாறி, அனுகூலமாக முடியும். வெளியூர்ப் பயணம் தவிர்க்கவும்.

**கும்பம்:** உற்சாகமான நாள். காரியங்கள் அனுகூலமாகும். உங்கள் பொறுப்புக்களை வாழ்க்கைத்துணை பகிர்ந்து கொள்வது ஆறுதலாக இருக்கும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும்.

**மீனம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சிலருக்குச் சகோதரர்களால் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு நவீன டிசைனில் புதிய ஆடைகளை வாங்கும் யோகம் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நில அபகரிப்பின் தாக்கத்தை பேசிய*

# 'நிலம்' குறும்படத்துக்கு இந்தியாவில் விருது!

**புதுடில்லி, டிசெ. 8**

**ஈழத்தமிழ்த் தேசத்தில் 'எமது நிலம் எமக்கு வேண்டும்' என நில அபகரிப்புக்கு எதிரான குரல்கள் தொடர்ச்சியாக ஒலித்து வரும் நிலையில், அபகரிப்புக்குள்ளான சொந்த நிலத்தின் ஏக்கத்தை பேசுபொருளாகக் கொண்ட 'நிலம்' குறும்படம் இந்தியாவில் விருதை வென்றுள்ளது.**




ஊட்டி குறும்பட விழாவிலேயே 2021ஆம் ஆண்டின் சிறந்த குறும்படத்துக்கான விருதை 'நிலம்' குறும்படம் வென்றுள்ளது. புலம்பெயர் தமிழர்களிடையே பிரசித்தி பெற்ற 'படலைக்குப் படலை' தொலைக்காட்சித் தொடரின் இயக்குநரும், சமூகஅரசியல் செயற்பாட்டாளருமாகிய ஊடகர் சுதன்ராஜ் இந்தக் குறும்படத்தை தயாரித்து இயக்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

கொரோனாவைக் கட்டுப்படுத்த

# உலகளாவிய ரீதியில் பொதுவான திட்டம்!

கொழும்பு, டிசெ. 8

உலகளாவிய ரீதியில் தொற்றுநோயைக் குறைப்பதற்கான பொதுவான நிகழ்ச்சி நிரலில் ஒருமித்த நிலைப்பாட்டை எட்டுவதற்கு ஐ.நா. பொதுச்சபை அவதானம் செலுத்த வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

அபுதாபியில் இடம்பெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அதிக கடன் சுமை கொண்ட இந்து சமுத்திர பிராந்திய நாடுகளுக்காக சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுக்களை முன்னெடுப்பது தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். (ம)

# மன்னார் பஸ் நிலையத்தில் சேவையாளர்கள் முரண்பாடு

*பயணிகள் பாதிப்பு*

மன்னார் பிரதான பேருந்து நிலையத்தில் பயணிகள் சேவையில் ஈடுபடும் சாரதிகள், நடத்துநர்கள் மற்றும் நேரக்கணிப்பாளர்கள் ஆகியோருக்கு இடையில், அண்மைக் காலமாக முரண்பாடுகள் அதிகரித்துள்ளன. இதனால் பயணிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மன்னார்பிரதானபேருந்து நிலையத்தில் தனியார் பேருந்து நேர அட்டவணையில், இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்துகளும், இலங்கைப் போக்குவரத்துச் சபையின் நேர அட்டவணையில் தனியார் பேருந்துகளும் குறுக்கீடு செய்வதால், இரண்டு தரப்பினருக்கும் இடையே அடிக்கடி வாய்த்தர்க்கம் இடம்பெறுகின்றது. இது தொடர்பாக தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் நேரக்கணிப்பாளரிடம் கேட்டபோது, எமக்குரிய நேர அட்டவணையில் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்துகள் பயணிக்கின்றன. இதனால் தனியார் பேருந்துகளின் உரிமையாளர்கள் லீசிங் கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கு திண்டாடுகின்றனர். பல முறை மன்னார் சாலையின் முகாமையாளருக்கு முறையிட்டும் எந்தவித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை. இ.போ.ச நேரக்கணிப்பாளர்கள் ஒழுங்காக சாரதிகளை வழிநடத்துவதில்லை -என்றார்.

இது தொடர்பில் மன்னார் சாலையின் உதவி முகாமையாளரிடம் கேட்டபோது, நாம் எமது நேரத்திலேயே எமது சேவையை வழங்குகின்றோம். அதிகளவு பயணிகளை ஏற்றுவதற்காக தனியார் பேருந்துக்கள் மிக மெதுவாகவே பயணிக்கின்றன. ஒப்பந்தத்தின் அடிப்படையில் தனியாருடன் பேருந்து நிலையத்தில் இணைந்து செயற்பட்டோம். எமக்குத் தனியாருடன் இணைந்து பணியாற்ற விருப்பமில்லை -என்றார். (ஒ-4-125)

## மரண அறிவித்தல்

பிறப்பு 05 . 01 . 1935



இறப்பு 07 . 12 . 2021

### புவனேஸ்வரி தனபாலசிங்கம் (சரஸ்வதி)

நாமகள் வீதி கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட புவனேஸ்வரி தனபாலசிங்கம் அவர்கள் நேற்று (07.12.2021) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா தனபாலசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அப்புத்துரை, அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், விஜயன் (நோர்வே), நிமலன் (சீனிக்குட்டி), குணரூபா, ஆகியோரின் பாசமிகு தாயாரும், ரஞ்சனி, பவித்திரா, ஜீவனா (நோர்வே), ஆகாஸ் (நோர்வே), ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்ற செல்வநாயகம் மற்றும் சுந்தரலிங்கம், பரமேஸ்வரி (ஜேர்மனி), இரட்ணகோபால் (லண்டன்), விஜயலட்சுமி (ஜேர்மனி), வசந்தகுமாரி, தேவகுமாரன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற கணேசலிங்கம், சந்திரமதி (நோர்வே), ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (08.12.2021) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**நாமகள் வீதி, கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில்.**
**077 6510304**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CR 57.. 1/6)

## மரண அறிவித்தல்

மலர்வு 03 . 06 . 1951



உதிர்வு 05 . 12 . 2021

### திருமதி சண்முகராஜா தர்மகுணவதனா (செல்வி)

ஊரெழுவை பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சண்முகராஜா தர்மகுணவதனா (செல்வி) கடந்த (05.12.2021) ஞாயிற்றுக் கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் ராணிநாயகம் தம்பதியரின் அன்பு மகளும், செல்லத்துரை பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், சண்முகராஜாவின் அன்பு மனைவியும், விக்னராஜ், யுசாந்தி, தேனுகா ஆகியோரின் பாசமிகு தாயாரும், Emily, Hunn, லவன் ஆகியோரின் அன்பு மாமியாரும், லிங்கநாயகம், காலஞ்சென்றவர்களான தர்மதுரை, தர்மச்சந்திரன் மற்றும் தர்மகுணலோசனா, தர்மசேகரன், தர்மகுணபூசனா, தர்மஜெயசூரியர் காலஞ்சென்ற தர்மகுணபவானி ஆகியோரின் அன்புச் சகோதரியும் நவரட்ண ராஜா துரைராஜா, சுகனசரசா, கங்கேஸ்வரி, காலஞ்சென்ற ராயேஸ்வரி மற்றும் சிறிஸ்கந்தராசா, செல்வராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் 10.12.2021 வெள்ளிக்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**[illegible]வீதி, உரும்பிராய்.**
**021 2230 785 - த.தர்மஜெயசூரியர்**
**0049218128600 - செ.சண்முகராஜா**

**தகவல்:**
**த.தர்மஜெயசூரியர்**
**(சகோதரன்)**

(CS 797) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

வடமத்திய மாகாணத்தில் பயிர்ச்செய்கைக்கு வெற்று நிலம் தேவை.
50 ஏக்கருக்கும் குறைவான நிலங்கள்.
உரிமம் பெற்ற நிலமும் பொருத்தமானது.
(CS 36157) (4/6)

**077 310 3305, 071 831 6105**

## நாகபூஷணி திருமண சேவை

நீங்கள் விரும்பும் மணமக்கள் ஜாதகங்கள் மிகப் பொருத்தமாக உடன் தரப்படும்.
264, ஆடியபாதம் வீதி.
கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.
**021 222 9306, 077 138 7596, 071 9999 306**
(CS 796) 1-6


# பொது அறிவித்தல் - 2022

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை , சுழிபுரம்

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் எல்லைக்குள் வசிக்கும் பொதுமக்கள் வியாபார வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மற்றும் அரச தனியார் நிறுவனங்களின் நிர்வாகிகளுக்குமான வேண்டுகோள்

| தொடர் இல | விடயம் | அறிவித்தல் |
|---|---|---|
| 1 | ஆதன வரி செலுத்துதல் | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின்141 முதல் 146 பிரிவுகளின் கீழ் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி மீள்மதிப்பீடு செய்யப்பட்ட அசைவற்ற ஆதனங்கள் தொடர்பான விபரங்கள் 02.12.2016ம் திகதிய இலங்கை வர்த்தமானப் பத்திரிகையிலும் பிரசுரிக்கப்பட்டு மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டதன் பிரகாரம் 2022 ஆம் ஆண்டிற்கான ஆதன வரியை சுழிபுரம். சங்கானை. வட்டுக்கோட்டை. அராலி ஆகிய உப அலுவலகங்களிலும் செலுத்தி சபையின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வரியிறுப்பாளர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். மேலும்<br>1. ஜனவரி 31ம் திகதிக்கு முன்னர் வரி செலுத்துவோரிற்கு வருட மொத்த வரியில் 10% கழிவு வழங்கப்படும்.<br>2. ஒவ்வொரு காலாண்டிற்குமுரிய வரியை அந்தக் காலாண்டின் முதல் மாத முடிவிற்குள் செலுத்துவோரிற்கு காலாண்டு வரியில் 5% கழிவு வழங்கப்படும்.<br>3. குறித்தகாலாண்டிற்குள் அக்காலப்பகுதிக்கான கட்டணம் செலுத்தத்தவறின் தண்டப்பணமும் அறவிடப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன். |
| 2 | ஆதனப் பெயர் மாற்றம் செய்தல் | எமது சபையின் எல்லைக்குள் ஆதனங்களைக் ,கொள்வனவு செய்பவர்களும் ஏற்கனவே ஆதன உடமையினைக் கொண்டு எமது ஆதன இடாப்பில் பெயர் மாற்றத்தினை மேற்கொள்ளாதவர்களும் எமது உப அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு பெயர் மாற்றத்தினை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். |
| 3 | பட வரைஞர்களைப் பதிவு செய்தல் | 2022ம் ஆண்டு படவரைஞராக பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2022ம் ஆண்டு ஜனவரி 31ம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளவும். புதுப்பித்துக் கொள்ளவும் தலைமை அலுவலகத்துடன் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். |
| 4 | கட்டிட அனுமதியும் குடிபுகு சான்றிதழும் | 1. தங்களது ஆதனத்தில் புதிதாக கட்டிடங்கள், மதில்கள் அமைப்பதாயின் அல்லது பழைய கட்டிடத்தினை திருத்துவதாயின் பிரதேச சபையில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து அனுமதி பெற்ற பின்னரே கட்டிடங்கள் மதில்கள் அமைக்கப்பட வேண்டும்.<br>2. புதிய கட்டிடம் அமைப்பதற்கு அனுமதி பெற்றவர்கள் அனுமதி பெற்ற திகதியிலிருந்து ஒரு வருட காலத்தினுள் வேலை பூர்த்தியடையாதுவிடின் கட்டிட அனுமதியைப் புதுப்பிக்கவேண்டும்.<br>3. அத்துடன் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டதும் பிரதேச உப அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து உரிய கட்டணத்தைச் செலுத்தி, அமைவுச் சான்றிதழைப் பெற்றுக்கொண்ட பின்னரே கட்டிடத்தில் குடிபுகுதல் வேண்டும்.<br>4. சபை எல்லைக்குள் குழாய்க் கிணறுகள் அமைப்பவர்கள் சபையின் அனுமதி பெற்று அமைத்தல் வேண்டும்.<br>5. அனுமதியற்ற கட்டிடங்களுக்கு தண்டப்பணம் அறவீடு செய்யப்படும் அத்துடன் வீதி எல்லைக்கோட்டை பாதிக்கும் வகையில் அமைக்கப்படும் கட்டடங்கள் அகற்றப்படும். |
| 5 | வியாபார அனுமதிப் பத்திரம் - 2022 | இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் மற்றும் எமது பிரதேசத்திற்குப் பொருள்களை விநியோகிப்போர் இதுவரை வியாபார விண்ணப்பங்களைப் பெற்று பூர்த்தி செய்து சமர்ப்பிக்காவிடில் உரிய விண்ணப்பப்படிவத்தை சங்கானை. சுழிபுரம். வட்டுக்கோட்டை. அராலி ஆகிய உப அலுவலகங்களில் 2022 ம் ஆண்டு ஜனவரி 31ஆம் திகதிக்குள் பெற்று அதனைப் பூரண்ப்படுத்தி உரிய உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 31.03.2022 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி வியாபார அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். 31.03.2022ம் திகதிக்கு முன்னர் வியாபார அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன். |
| 6 | துவிச்சக்கர வண்டி மற்றும் மிருக உரிமம் | துவிச்சக்கர வண்டிகள், வளர்ப்பு நாய்கள் வைத்திருப்போர் 31.03.2022ம் திகதிக்கு முன் அந்தந்த உப அலுவலகங்களில் உரிய கட்டணங்களைச் செலுத்தி 2022ம் ஆண்டுக்கான வாகன் மிருக உரிமங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். |
| 7 | கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்தல் | சபை எல்லைக்குள் அலைந்து திரியும் கட்டாக்காலிகளை உரிமையாளர்கள் கட்டி வளர்க்க வேண்டும் என்பதோடு வீதிகளில் வண்டில்கள் இன்றி போக்குவரத்தக்கு இடையூறு செய்யும் மாடுகளையும். கட்டாக்காலி மாடுகளையும் சபையினால் பிடிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். |
| 8 | பொது சுகாதாரத்தினைப் பேணுதல் | அபிவிருத்தி செய்யப்படாத பற்றைகள் உள்ள காணிகள் துப்பரவு செய்யப்பட வேண்டும் என்பதுடன் உணவு கையாளும் நிலையப் பணியாளர்கள் மருத்துவப்பரிசோதனை மேற்கொண்டு அனுமதி பெற்றிருத்தல் வேண்டும். |
| 9 | திண்மக் கழிவுகளை அகற்றுதல் | திண்மக்கழிவுகள் பொது இடத்தில் கொட்டுதல் தடை செய்யப்படுவதோடு அவற்றை தமது இடங்களிலேயே சூழலுக்கு பாதிப்பற்ற வகையில் புதைத்தோ அல்லது எரித்தோ சுத்தம் பேணுமாறு வேண்டப்படுகின்றீர்கள். அவ்வாறு அகற்ற முடியாதுள்ள உக்காத கழிவுப் பொருட்களை மாத்திரம் தரம் பிரித்து பிரதேச சபை உப அலுவலகங்களில் தொடர்புகொண்டு அவற்றினை அகற்றிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். மேலும் நுளம்பு பெருக்கத்திற்கு ஏதுவாக சூழலை வைத்திருப்போர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன். |
| 10 | வீதி ஒழுங்கைப் பேணல் | வீதி ஒழுங்கை பேணி நடக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றது. வியாபார நிலையங்களிற்கு முன்னால் பாதசாரிகளின் போக்குவரத்திற்கு இடையூறாக பொருள்களை வெளியே வைத்து விற்பனை செய்வது காட்சிப்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு வர்த்தக நிலைய உரிமையாளர்களிற்கு அறியத்தருகின்றேன். சந்தைச் சுற்றாடலில் இருந்து 500 மீற்றர் சுற்று வட்டாரத்தில் கடல் உணவுகள் மரக்கறிகள். இறைச்சிகள் என்பன விற்பது தடை செய்யப்பட்டுள்ளது. |
| 11 | நீர் வழங்கல் சேவை | பொதுமக்கள் மற்றும் வியாபார நிலையங்கள் அரச தனியார் நிறுவனங்கள் தமது விசேட நிகழ்வுகளிற்கு குடிநீர் தேவைப்படின் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கட்டணம் செலுத்தி குடிநீரைப் பெற்றுக்கொள்ள முடியும். |
| 12 | கனரக வாகன சேவை | என்ஜின் றோலர் (Engine Roller) மற்றும் பைக்கோ (JCB) வாடகைக்கு தேவைப்படுவோர் தலைமை அலுவலகத்தில் உரிய கட்டணம் செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும். |
| 13. | சூழல் பாதுகாப்பு உரிமம் | சூழல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக்கொள்ள வேண்டியோர் வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தினைப் பெற்றுக்கொள்ளவும் எற்கனவே உரிமத்தினைப் பெற்றுக் கொண்டவர்கள் உரிமம் காலாவதியாகியிருப்பின் அதனைப் புதுப்பிக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுகொள்கின்றேன். வலுவிலுள்ள சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் இல்லாமல் மேற்குறிப்பிட்ட தொழில்களை நடத்தினால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதோடு தண்டப்பணமும் அறவிடப்படும். |
| 14 | விளம்பரங்களை அமைத்தல் காட்சிப்படுத்தல் | வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் நிர்வாகப் பிரிவிலுள்ள பொது வீதிகளின் இருமருங்கும் அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் பொருத்தப்படும் அல்லது காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களுக்கான கட்டணத்தை 31.01.2022 ம் திகதிக்கு முன் செலுத்தி சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். இவ்வாறு அனுமதி பெறப்படாத சகல விளம்பரங்களும் உரிய நிலையங்களில் இருந்து 01.02.2022ம் திகதிக்குப் பின் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| 15 | தரகர் முறை நீக்கம் | எமது பிரதேச சபை எல்லைக்குள் சந்தைகளில் தரகர் மூலமான நடைமுறை முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு சந்தைக் குத்தகையாளர் வேண்டப்படுகின்றனர். |

தவிசாளர்,
வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்.

(CR 36162 ) (3/6)

# அமைப்புக்களுக்கு தெரியாமல் 49 ஏக்கர் காணி குத்தகைக்கு

முல்லைத்தீவு-மாந்தை கிழக்குப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கரும்புள்ளியான் கிராமத்தில், 49 ஏக்கர் காணி குத்தகை அடிப்படையில், கிராம அமைப்புக்களுக்குத் தெரியாது வழங்கப்பட்டுள்ளது என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

குத்தகை எடுப்போர் விவரம் கிராம அலுவலர்கள் மற்றும் பொதுஅமைப்பினரின் ஒப்புதலுடன் மாவட்டக் காணி பயன்பாட்டுக்குழுவுக்குப் பாரப்படுத்தப்படும்.

எனினும் 49 ஏக்கர் காணி குத்தகைக்கு வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்ட சம்பவம் கரும்புள்ளியான் கிராம அமைப்புகளுக்கு தெரிவிக்கப்படவில்லை.

இது தொடர்பில் கிராம அலுவலரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, 49 ஏக்கர் காணி குத்தகைக்கு வழங்கப்பட்டது. அது தொடர்பில் நான் அறிந்திருக்கவில்லை. மேலதிக தகவல்களுக்கு பிரதேச செயலரைத் தொடர்பு கொள்ளவும். - என்றார்.

குறித்த 49 ஏக்கர் காணி குத்தகை அடிப்படையில் கொல்லவிளாங்குளம் பகுதியைச் சேர்ந்த நபரொருவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பிரதேச செயலர் தனது அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்துள்ளார் என்று மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

மாந்தை கிழக்குப் பிரதேச செயலகம், பிரிவு துணை நிர்வாக அலகுகளாக 15 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்டுள்ளது.

இங்கு பல கிராம மக்களுக்கு வயல் நிலங்களே இல்லாத நிலையில் 49 ஏக்கர் காணி குத்தகைக்கு வழங்கப்படுவது எந்தளவுக்கு நியாயப்பானது என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

(ஒ-4-19)


## தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் கம்பனிக்கு மேசன், கூலியாட்கள் வேலைக்கு தேவை.
தொடர்புகளுக்கு: **075 156 7459** (CS 800) (1/6)

## பௌதிகவியல் Physics

உயர்தர மாணவர்களிற்கான பௌதிகவியல் தனியாகவும், குழுவாகவும் கற்பிக்கப்படும்.
(Personal and Group Classes)
(CS 794) (3 / 6)
தொடர்பு : **076 157 0107**

## வேலையாட்கள் தேவை

யாழில் இயங்கும் பலசரக்கு மொத்த விற்பனை நிலையத்திற்கு விற்பனை பிரதிநிதி (Sales Rep), சிட்டை எழுதுனர், உதவியாட்கள் ஆண், பெண் இருபாலாரும் தேவை.
(CS 787) 1-6
தொடர்புகளுக்கு:- **076009 4946**

## பணிப்பெண் தேவை

வயோதிபப் பெண் ஒருவரை தங்கி நின்று பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
பிற்பகல் 6.00 - 8.00 மணி வரை தொடர்பு கொள்ளவும்
**077 069 8105** (CS 41449)(3/6)


## கண்ணீர் அஞ்சலி



தேசிய கல்வி நிறுவக கல்வி டிப்ளோமா பாடநெறியின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய விரிவுரையாளர் ஜானகி அம்மாள் தர்மசீலன் அவர்களின் அன்புத் தந்தை

### இராசையா சுந்தரலிங்கம்

அவர்களின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது கண்ணீரைக் காணிக்கையாக்குகிறோம். அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(CS 41453) (3/6)

யாழ்ப்பாணப் பிராந்திய கல்வி டிப்ளோமா பாடநெறியின் ஓய்வு பெற்ற இணைப்பாளர், இணைப்பாளர், விரிவுரையாளர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

08.12.2021

மலர்வு 27 . 06 . 1948

உதிர்வு 01 . 12 . 2019



## திருமதி கமலாதேவி இராஜரட்ணம்

(யாழ்ப்பாணம் சிவலிங்கப்புளியடியைப் பிறப்பிடமாகவும் முள்ளியவளை, வவுனியாவை வதிவிடமாகவும் கொண்டவர்)

*திதி : பிலவ வருடம் கார்த்திகை 22ம் திகதி வளர்பிறை பஞ்சமி*

காலனவன் வஞ்சித்து ஆண்டுகள் இரண்டு கடந்ததம்மா!
நீ நீங்கினாலும் உன் நினைவுகள் என்னும் பெருங்கடலில்
சிக்கிக் கரைசேர முடியாமல் தவிக்கிறேன்!
கனவுகள் பல இருந்தும் என் நிகழ்கால நிலையை எண்ணி
தனிமையோடு தடுமாறி கிடக்கிறேன்!

வாழ்வாங்கு வாழ்வதற்கு வழிசொல்லிச் சென்றாயே!
நாம் வாழும் வாழ்க்கையை கண்குளிரக் காணவன்றோ!
காலனவன் வஞ்சித்து விட்டான் உள்ளம் பதறுகிறது!

அன்று எம் அழுகுரல் கேட்டு புன்முறுவல் செய்தீர்கள்
இன்றும் அழுகிறோம் உங்கள் புன்முறுவல் காணாமல்!
இறப்பை ஏற்றுக்கொள்ளும் இதயம் ஏனோ
உங்கள் இழப்பை ஏற்றுக்கொள்ள மறுக்கிறது!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

462, K.K.S.வீதி,
யாழ்ப்பாணம்.
076 807 8985

கணவர், மகள்மார், மருமகன்மார்,
பேரப்பிள்ளைகள், சகோதரி,
சகோதரர்கள், மச்சாள்மார்.

(cs.41436 (2.6)

# மரண அறிவித்தல்

தோற்றம் 03 08 1936

மறைவு 04 12 2021



## திரு. இராமநாதன் கேதாரநாதன்

**(ஓய்வுநிலை சிரேஷ்ட வருமானவரி அலுவலர் இறைவரித் திணைக்களம், பழைய மாணவர் St.Anthony's College - ஊர்காவற்றுறை)**

யாழ்.நாரந்தனை கிழக்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திரு. இராமநாதன் கேதாரநாதன் அவர்கள் 04.12.2021 சனிக்கிழமை அன்று இறையடி எய்தினார். அன்னார் காலஞ்சென்றவர்களான இராமநாதன் தங்கம்மா (நாரந்தனை) தம்பதிகளின் மூத்த புதல்வரும் கரைச்சிக்குடியிருப்பு முல்லைத்தீவைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான குருநாதபிள்ளை தங்கரத்தினம் தம்பதிகளின் மூத்த மருமகனும் நேசமணி (ஓய்வுநிலை உத்தியோகத்தர், ஓய்வூதியக் கிளை, யாழ்.கச்சேரி) அவர்களின் அன்புக் கணவரும் Dr.சுதர்சன் (ஐக்கிய அமெரிக்கா), Dr.தாரிணி (அவுஸ்திரேலியா), யாழினி (இங்கிலாந்து) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற இரகுநாதன் (அக்குரஸ்ஸ வர்த்தகர்), திருஞானசம்பந்தர் (நெதர்லாந்து), பரமேஸ்வரி (ஜேர்மனி), சகுந்தலாதேவி (தனலெட்சுமி - இங்கி லாந்து), பேரின்பநாயகி (தயா - இங்கிலாந்து) ஆகியோரின் அன்புச் சகோதரரும் யோகேஸ்வரி, பேரானந்ததவமணி, சரவணபவான், சண்முகலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுகந்தினி (ஐக்கிய அமெரிக்கா), ஷான் மயில்வாகனம் (இங்கிலாந்து) ஆகியோரின் அன்பு மாமனாரும் விஷாலி, விதுஜன், சௌமியா, தாமிரா ஆகியோரின் செல்லப் பேரனும் மகேஸ்வரன் - செல்வராணி, Dr.விமலேஸ்வரன் - ஜெகதீஸ்வரி, சுகுணவதி - காலஞ்சென்ற Dr.சிவபாலேஸ்வரராஜா, காலஞ்சென்ற சிவகுருநாதன் - வசந்தாதேவி, சிவநாதன் - சிவசோதி, குலநாதன் - சுகந்தினி, சக்திதேவி - சிவகுமார், சுபத்திராதேவி - மகேந்திரன், ஜெயநாதன் - இந்துரோமா, லலிதாதேவி ஆகியோரின் பெருமதிப்பிற்குரிய தலையாய மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 09.12.2021 நாளை வியாழக்கிழமை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் மு.ப 09.00 மணியளவில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பி.ப 01.00 மணியளவில் இறுதிக்கிரியை நடைபெற்று பின்னர் கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

**தகவல்: திருமதி கேதாரநாதன் & குடும்பத்தினர்**
**இல.12-6/1, இராஜசிங்க வீதி, கொழும்பு - 06. T.P: 0112502935**

(ACO 15900) (3/6)


# அந்தியேட்டியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

கடந்த 08.11.2021 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்த
எமது குடும்பத் தலைவர்

## அமரர் கலாநிதி ஆறுமுகம் சிவசம்பு விவேகானந்தன்

மலர்வு 05.08.1939

உதிர்வு 08.11.2021



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (08.12.2021) புதன்கிழமை காலை 5.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அதனைத்தொடர்ந்து முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

எங்களது துயரத்தில் பங்குகொண்டவர்களுக்கும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த சகல உள்நாட்டு, வெளிநாட்டு உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் பல்வேறு வழிகளில் உதவிய உறவினர்களுக்கும் அனைத்து அன்புள்ளங்களுக்கும் எங்களது இதய பூர்வமான நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

5/1, றக்கா வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**மார்க்கண்டு உதயகுமார்**
(புத்தூர் உபதபால் ஊழியர்)
**தோற்றம்: 24.12.1956**

**உதயகுமார் வசந்திமாலா**
**தோற்றம்: 08.02.1966**

**இறைவன் அடியில் : 08.12.2011**

ஆண்டுகளோ ஓடி மறைகின்றன
ஆனாலும் உங்கள் நினைவுகளோ
எள்ளளவும் குறையவில்லை.......

அன்பிற்கு இலக்கணமாய்
அவனியில் வாழ்ந்து
பண்புடைமை காத்து
பக்குவமாய் வழி நடந்தீர்.......

இரக்கத்தின் இருப்பிடமாய்
ஈகை பல செய்து எல்லோருக்கும்
நல்லவராய் நாணயமாய் நடந்தீர்.......

ஏனோ இறைவன் இடை நடுவில்
பறித்துவிட்டான்.

துன்புற்றோர் துயர் துடைத்து
துணைக்கரமாய்
அடைக்கலம் தந்த உம்மை
ஆண்டவன் ஏனழைத்தான்
பண்புள்ளோரை பல காலம்
வாழவிடக் கூடாதென்றோ?

நீங்களில்லாத நாள்களில்
நீளும் காலங்கள் எல்லாம்
நீங்கா உங்கள் நினைவுகளுடன்
நினைவுகளாய் நிறைந்து எங்கள்
நிகழ்காலத்தை கடத்தி
கடந்த காலத்திற்கு அழைத்துச்
செல்கின்றன.

எங்கள் நெஞ்சமதில் - நிறைந்த
தெய்வங்களே
பாசத்தை எங்களுக்கு
கொட்டி வளர்த்து விட்டு
வானத்தில் பறந்தீர்களோ....

நீங்கள் எங்களுடன் இருந்து
நாங்கள்
பயணித்த காலங்கள் மட்டுமே
இன்றும் பசுமையாய் எங்கள்
நினைவுகளில்.....

என் செய்வோம்
இறைவன் சித்தம் இது
இனி காணமுடியாத
சோகநிலையோடு
இங்கிருந்தே ஏங்கியழுகிறோம்.....

வாழ்க்கை
சக்கரத்தில் உயிர் உதிர்வு
நிச்சயமானது என்றெண்ணி
பிரிந்துவிட்ட உங்கள்
ஆத்மா இறையின் பாதங்களில்
சாந்தி பெற பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி !!!**

**நீர்வேலி மேற்கு,**
**4ஆம் மைல்,**
**இராஜ வீதி, நீர்வேலி.**

**பிள்ளைகள்: செந்தூரன் (பிரான்ஸ்)**
**குகதீபன் (கனடா)**
**சங்கீதன் (கனடா)**
**கோபிகா (கனடா)**

(cs.793) (2.6)

# புதிய நிர்வாகசபை தெரிவு

மட்டுவில் வடக்கு ஸ்ரீ வேற்பிள்ளை சனசமூக நிலையத்துக்கு புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது.

இதன்போது தலைவராக மா.வேதலிங்கம், உபதலைவராக க.கணேசலிங்கம், செயலாளராக செ.நகுலேஸ்வரதாசன், உபசெயலாளராக தெ.திருவேரகன், பொருளாளராக த.சுரேஸ் ஆகியோரும், உறுப்பினர்களாக செ.சிவபாலசுந்தரம், கோ.பாலகிருஷ்ணன், செ.சுஜந்தன், சு.சிவதாசன், சி.மயூரன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ஒ-4-159)

# மனித உரிமைகள்தின நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.8

யாழ்ப்பாணம் கியூடெக் - கரித்தாஸ் நிறுவனத்தின் சர்வமத சகவாழ்வு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், சர்வதேச மனித உரிமைகள் தினம் எதிர்வரும் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் இடம்பெறும். (ஒ-4)

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை – சுழிபுரம்
## ஆண்டுக்கான வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல் - 2022

2022 ஆம் ஆண்டில் சபைக்கு பின்வரும் பொருள்கள் மற்றும் சேவைகளினை வழங்கும் பொருட்டு பதிவு செய்து கொள்ளவிரும்பும் தகைமை வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொகுதி A | பொருள்கள் விவரம் |
|---|---|
| A – 01 | காகிதாதிகள், எழுதுபொருள்கள் மற்றும் உபகரணங்கள் |
| A – 02 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் |
| A – 03 | நூலகங்களுக்கான நூல்கள் |
| A – 04 | மின்சாரப் பொருள்கள் ,உதிரிப்பாகங்கள் மற்றும் இணைப்புப் பொருள்கள் |
| A – 05 | கணனி, இலத்திரனியல் பொருள்கள், நிழற்பிரதியாக்கல் இயந்திரம் மற்றும் அதனோடிணைந்த பொருள்கள் |
| A – 06 | திரைச்சீலைகள் மற்றும் துணிவகைகள் |
| A – 07 | தும்புத்தடி, விளக்குமாறு, கால்துடைப்பம், மற்றும் அதுசார்பான பொருள்கள் |
| A – 08 | சுத்திகரிப்பு உபகரணங்கள், சுத்திகரிப்புப் பொருள்கள் மற்றும் தொற்று நீக்கிகள் |
| A – 09 | வாகன உதிரிப்பாகங்கள், துணைப்பொருள்கள் |
| A – 10 | எரிபொருள்கள், உராய்வு நீக்கிகள் |
| A – 11 | கட்டிட இரும்புப் பொருள்கள், வாணிஸ், பெயின்ட், மற்றும் அதனோடிணைந்த பொருள்கள் |
| A – 12 | கற்கள், மண் வகைகள் |
| A – 13 | தீராந்திகள், பலகைகள் |
| A – 14 | நீர் விநியோகப் பொருள்கள் மற்றும் இணைப்புப் பொருள்கள் |

| தொகுதி B | சேவைகள் விவரம் |
|---|---|
| B – 01 | கணனி, நிழற்பிரதியாக்கல் இயந்திரம் மற்றும் அதனோடிணைந்த பொருள்கள் திருத்தமும் பராமரிப்பு செய்தலும் |
| B – 02 | மின்மோட்டார்கள், நீர் இறைக்கும் இயந்திரம் திருத்தமும் மீளமுறுக்குதலும் |
| B – 03 | இலத்திரனியல் சாதனங்கள் திருத்தம் |
| B – 04 | அலுவலக தளபாடங்கள் , உபகரணங்கள் திருத்தமும் பராமரிப்பும் |
| B – 05 | அச்சிடுதலும் புத்தகங்கள் கட்டுதலும் |
| B – 06 | பாதுகாப்பு சேவையும், சுத்திகரிப்பு சேவையும் |
| B – 07 | வாகனங்களுக்குரிய ரியூப் ஒட்டுதல், உலோக வேலைகள் |
| B – 08 | வாகன திருத்தம் |
| B – 09 | வாகன சுத்திகரிப்பு |
| B – 10 | இறப்பர் முத்திரை தயாரித்தல் |
| B – 11 | ஒட்டு வேலைகள், உலோக வேலைகள் |
| B – 12 | கோலவுடை, சீருடை தைத்தல் |

| தொகுதி C | ஒப்பந்த வேலைகள் (CIDA) பதிவு உள்ளவர்கள் மட்டும் |
|---|---|
| C – 01 | கட்டிட நிர்மானமும் திருத்தமும் |
| C – 02 | வீதி நிர்மானமும் திருத்தமும் |
| C – 03 | கிணறு அமைத்தல் |
| C = 04 | வீதியில் உள்ள சிறிய பாலங்களை நிர்மானமும் திருத்தமும் |

**நிபந்தனைகள்**

01. பதிவுகள் 2022 ஆம் ஆண்டிற்கு மட்டுமே செல்லுபடியாகும்

02. ஒவ்வொரு தொகுதியினதும் தொடர் இலக்கம் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி விண்ணப்பப் படிவங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அத்துடன் பொருள்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு பதிவு செய்து கொள்வோர் ஒவ்வொரு விடயத்திற்கும் தனித்தனியாக ரூபா 500/= பதிவுக்கட்டணமாக வும் ஒப்பந்த வேலைகளுக்கு பதிவு செய்துகொள்வோர் ரூபா 1000/= பதிவுக்கட்டணமாகவும் செலுத்தி தலைமையலுவலகத்தில் 28.12.2021 ஆம் திகதி வரை விண்ணப்பப்படிவங்களை பெற்றுக்கொள்ளலாம்.

03. பதிவு செய்து கொண்டுள்ள வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படும் என்பதுடன் தேவையேற்படும் சந்தர்ப்பங்களில் இதற்குப் புறம்பான வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்களைக் கோருதல் மற்றும் கொள்வனவு செய்யும் உரிமையும் வேறு பெறுகைச் செயற்பாடுகளைக் கையாளும் உரிமையும் பிரதேச சபைக்கு உண்டு.

04. மனுக்கள் கோரும் போது சரியான விலை மனுக்கள் சமர்ப்பிக்காத அல்லது கோரப்பட்ட பொருள்களை உரிய காலத்தினுள்ளும் மாதிரிக்கு அமைவாகவும் வழங்காத பதிவு செய்த வழங்குனர்களின் பெயர்கள் எதுவித முன்னறிவித்தலுமின்றி பதிவிலிருந்து நீக்கப்பட்டு கறுப்பு பட்டியலில் சேர்க்கப்படும்.

05. வியாபார பதிவுச் சான்றிதழில் குறிப்பிட்ட பொருள்கள் சேவைகளுக்கு மட்டுமே வழங்குனர்கள் பதிவு செய்யப்படுவார்கள்.

06. பழுது பார்த்தலுக்கோ, வாகன பராமரிப்புக்கோ பதிவு செய்யப்படவுள்ள கராஜ்கள், சேவிஸ் நிலையங்கள் என்பன அடிப்படைத் தேவையான வசதிகளைக் கொண்டிருத்தல் அவசியம். தேவையேற்படும் போது இயந்திரப் பொறியியலாளர் மூலம் தரத்தினை பரிசீலனை செய்வதற்கான முழு அதிகாரம் உண்டு.

07. விண்ணப்பப்படிவங்கள கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வழங்கல் சேவைகளுக்கான விண்ணப்பம் - 2022 எனக் குறிப்பிட்டு "தவிசாளர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை சுழிபுரம்" என்னும் முகவரிக்கு 28.12.2021 ஆம் திகதிக்கு முன்பதாக பதிவஞ்சல் மூலமோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

08. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

த.நடனேந்திரன்
தவிசாளர்
வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.

(ЄГ.36163) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேசக் கண்காட்சியில் இலங்கைத் தேயிலைக்கு வரவேற்பு

*குவாங்சோவில் உள்ள இலங்கையின் துணைத் தூதரகம் தெரிவிப்பு*

சீனத் தேயிலை சந்தைப்படுத்தல் சங்கம் மற்றும் குவாங்டாங் தேயிலை தொழிற் சங்கம் ஆகியவற்றால் கடந்த 25ஆம் திகதி தொடக்கம் 29ஆம் திகதிவரை நடத்தப்பட்ட தேயிலைக் கண்காட்சியில், பல கொள்வனவாளர்களைக் கண்டறிந்து, உள்ளூர் மற்றும் சர்வதேசக் கண்காட்சியாளர்கள் மற்றும் தேயிலை தொடர்பான ஏனைய நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள இலங்கை நிறுவனங்களால் முடிந்தது என்று, குவாங்சோவில் உள்ள இலங்கையின் துணைத் தூதரகம் ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

சீனாவில் அமைந்துள்ள 5 முக்கிய இலங்கைத் தேயிலை உற்பத்தி நிறுவனங்களின் பங்கேற்பை குவாங்சோவில் உள்ள இலங்கையின் துணைத் தூதரகம் ஏற்பாடு செய்திருந்தது.

இந்தக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப் பட்டிருந்த 'சிலோன் டீ' வகைகளின் தனித்துவமான தோற்றம் மற்றும் தரம் தொடர்பில் விவரிக்கப்பட்டதன் பின்னர் அவை பார்வையாளர்களுக்கு விற்பனை செய்யப்பட்டன. பல பார்வையாளர்கள் தேயிலையை ருசித்து, கொள்வனவு செய்வதை ஊக்குவிக்கும் வகையில் தேயிலையுடன் தொடர்புடைய இலங்கை சிற்றுண்டிகளும் தேநீரை சுவைக்கும்போது வழங்கப்பட்டன.

இலங்கைத் தேயிலையானது கடந்த வருடங்களில் தேயிலைக் கண்காட்சியில் இலங்கையின் முக்கிய தேயிலை நிறுவனங்களால் பல தடவைகள் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டது.

7 இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழில்முறைக் கொள்வனவாளர்கள் மற்றும் பார்வையாளர்களுடன் சுமார் 1000 முக்கிய உள்ளூர் மற்றும் சர்வதேச தேயிலை நிறுவனங்கள் இந்த ஆண்டு கண்காட்சியில் பங்கேற்றன.

(த)

# பொதுக்கூட்டம்

சாவகச்சேரி, டிசெ.8

பளை - இந்திராபுரம் சனசமூக நிலைய பொதுக்கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இந்திராபுரம் பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறும்.

கிராம மக்களின் முழுமையான பங்களிப்புடன் அமைக்கப்பட்ட சனசமூக நிலையக் கட்டடம் 2000 ஆம் ஆண்டு போர்க்காலத்தில் முற்றாகச் சேதமடைந்தது.

தற்போது அரச உதவியுடன் புதிய கட்டடம் அமைக்க ப்பட்டு, புதிய நிர்வாகத்தைத் தெரிவு செய்வதற்கான பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது.

(ஒ-4-9)

## துணுக்காய் பிரதேசசபை
## 2022 ஆம் ஆண்டிற்கான மீள்கேள்வி அறிவித்தல்

துணுக்காய் பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட பொதுச்சந்தை, ஆட்டிறைச்சிக்கடைகள், மாட்டிறைச்சிக்கடைகள், கோழி இறைச்சிக் கடைகள் என்பவற்றை 01.01.2022 தொடக்கம் 31.12.2022 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கீழே குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் :- 08.12.2021 – 21.12.2021
(அலுவலக நாட்களில் மு.ப. 8.30 - பி.ப 3.00)
கேள்விப் பத்திரம் வழங்கும் இறுதித் திகதி :- 21.12.2021 பி.ப 12.00 மணிவரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி :- 21.12.2021 பி.ப 01.00 மணிவரை
கேள்வி திறக்கப்படும் திகதி :- 21.12.2021 பி.ப 2.00 மணி
கேள்வி திறக்கும் இடம் :- துணுக்காய் பிரதேசசபை அலுவலகம்

கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை செயலாளர், துணுக்காய் பிரதேசசபை , துணுக்காய் என்ற முகவரியிட்டு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்துக்கு முன் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை **" பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு " என்ற முகவரியிட்டு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.**

**இறைச்சிக்கடை**

| இல | குத்தகை வகை | இடம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப்படும் வைப்புப்பணம் | மீளளிக்கப்பட முடியாத கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 01 | ஆட்டிறைச்சிக்கடை | துணுக்காய் | 25,476.00 | 1,500.00 | 500.00 |
| 02 | மாட்டிறைச்சிக் கடை | துணுக்காய் | 258,446.00 | 2,500.00 | 500.00 |
| 03 | கோழி இறைச்சிக்கடை | துணுக்காய் | 27,000.00 | 1,500.00 | 500.00 |
| 04 | ஆட்டிறைச்சிக்கடை | மல்லாவி | 63,250.00 | 1,500.00 | 500.00 |
| 05 | கோழி இறைச்சிக்கடை | மல்லாவி | 1,022,000.00 | 1,500.00 | 500.00 |
| 06 | ஆட்டிறைச்சிக்கடை | ஜயன்கன்குளம் | 15,378.00 | 1,500.00 | 500.00 |
| 07 | மாட்டிறைச்சிக் கடை | ஜயன்கன்குளம் | 132,788.00 | 2,500.00 | 500.00 |
| 08 | கோழி இறைச்சிக்கடை | ஜயன்கன்குளம் | 15,378.00 | 1,500.00 | 500.00 |

**பொதுசந்தை**

| இல | குத்தகை வகை | இடம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப்படும் வைப்புப்பணம் | மீளளிக்கப்பட முடியாத கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 01 | துணுக்காய் பொதுச்சந்தையும் துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையமும் | துணுக்காய் | 29,791.00 | 1,500.00 | 500.00 |
| 02 | ஜயன்கன்குளம் பொதுச்சந்தையும் துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையமும் | ஜயன்கன்குளம் | 29,282.00 | 1,500.00 | 500.00 |
| 03 | மல்லாவி பொதுச்சந்தையும் துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையமும | மல்லாவி | 1,450,000 | 1,500.00 | 500.00 |

**நிபந்தனைகள்:**

01. கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் இலங்கை பிரஜையாகவும் தமது ஆள் அடையாளத்தை நிரூபிக்கக்கூடியவராகவும் சான்றுகள் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.
02. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறாகக் கணிக்கப்பட்டவர்கள் என தெரியவருமிடத்து கேள்விகோர தகுதியற்றவர்களாக கருதப்படுவர்.
03. எந்தவொரு கேள்வியையும் காரணம் தெரிவிக்காது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபை தவிசாளருக்கு பூரண அதிகாரம் உண்டு. ஆகக் குறைந்த கேள்வி தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்பட மாட்டாது.
04. வியாபார உத்தரவுக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.
05. சபையால் விதிக்கப்படும் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.
06. எம்மால் நிர்ணயிக்கப்படும் கொல்களத்திலேயே இறைச்சிக்குரிய மிருகங்கள் அறுக்கப்பட வேண்டும்.
07. இறைச்சிக்காக ஆடு , மாடு கொல்லப்பட முன் எம்மால் குறிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு அமைய நடந்து கொள்ள வேண்டும்.
08. மேலதிக விவரங்களைத் தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்
09. சித்தியடையும் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் மூன்றில் ஒரு பகுதிப்பணத்தை ஒரு வார காலத்திற்குள் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்

**அ.அமிர்தலிங்கம்**
**தவிசாளர்**
**பிரதேசசபை,**
**துணுக்காய்.**

(cr.36161)(2.6)

# வாக்குறுதியளித்தும் பஸ் சேவையில்லை

## மாணவர்கள் பாதிப்பு

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை தனியார் பேருந்துச் சங்கத்தினர் நடைமுறைப்படுத்தவில்லை. இதனால் மாந்தை கிழக்கு மாணவர்கள் பாதிக்கப்பட்டனர்.

மாந்தை கிழக்கில் காலையில் சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்து மல்லாவி மத்திய கல்லூரி வரை செல்கின்றது.

எனினும் மாணவர்கள் பாடசாலைகள் முடிந்தவுடன் வீடு திரும்பக் கூடிய வகையில் பேருந்துச் சேவை இடம்பெறுவதில்லை. இது தொடர்பில் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் போக்குவரத்துத் துறையினருடன் நடைபெற்ற கூட்டத்தில் மாணவர்கள் வீடு திரும்பக் கூடிய வகையில் பேருந்துச் சேவை இடம் பெறும் என்று தனியார் பேருந்துச் சங்கத்தால் தெரிவிக்கப்பட்டது.

எனினும் வாக்குறுதி அளித்தபடி, பேருந்துச் சேவை இடம்பெறாத காரணத்தால், மாணவர்கள் வீதிகளில் பேருந்துக்காக காத்திருந்து ஏமாற்றத்தோடு வீடு திரும்புகின்றனர்.

எனவே மாந்தை கிழக்கு மாணவர்கள் வீடு திரும்புவதற்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-4-13)

## மரண அறிவித்தல்



**திருமதி நாகபூஷணி பாக்கியராசா (ஆசிரியை)**

96 மணிக்கூட்டு வீதி யாழ்ப்பாணத்தை (பெருமாள் கோவிலடி) பிறப்பிடமாகவும் 859/06 கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி. நாகபூஷணி பாக்கியராசா (ஆசிரியை) நேற்று (07.12.2021) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி பொன்னுத்துரை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற காரைநகர் திரு.திருமதி நவரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகளும், நவரத்தினம் பாக்கியராசா அவர்களின் அன்பு மனைவியும், கோபிராஜ், பத்மஜா, கோபிரஞ்சன் ஆகியோரின் அன்பு தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.12.2021) வியாழக்கிழமை மதியம் 12:00 மணியளவில் அன்னாரின் வீட்டில் கிரியைகள் நடைபெற்று 02:00 மணியளவில் கோம்பயன் மணல் மயானத்துக்கு தகனக்கிரியைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புக்கு:0779967140**
**(மகள்)**

**தகவல்:**
**கணவர், பிள்ளைகள்**

(CS 80211-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனவரியில்...

இவ்வாறு, எச்சரிக்கை விடுத்துள்ளது, அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்.

ஒமிக்ரோன் வைரஸ் நாட்டுக்குள் நுழைவதைத் தடுக்கும் முயற்சியில், தடுப்பூசி வழங்கலுக்குத் தேவையான அனைத்து தடுப்பூசி அளவையும் பெறுவதும் பொது மக்களை வழிநடத்துவதும் அரசின் பொறுப்பாகும் என்றும் மருத்துவ சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

"தென்னாபிரிக்காவிலிருந்து நாடு திரும்பிய பெண்ணுக்கு ஒமிக்ரோன் தொற்று உள்ளது என்பது பரிசோதனையின் பின்னர் தெரியவந்த பின்னரும் அது பற்றிய தகவல்கள் மறைக்கப்பட்டுள்ளன. அந்தப் பெண்ணின் குடும்பத்தினரின் தனிமைப்படுத்தல் விடயங்களும் மறைக்கப்பட்டுள்ளன. அத்தகைய நபர்களுடன் தொடர்புடையவர்கள் வெளியில் நடமாடித்திரிந்துள்ளனர். இவை பற்றிய விடயங்கள் களப்பணியில் ஈடுபட்டிருக்கும் சுகாதாரத் தரப்பினருக்கு வழங்கப்படாது மறைக்கப்பட்டுள்ளன..." என்றெல்லாம் சுகாதாரப் பரிசோதகர் சங்கத்தின் தலைவர் பகிரங்கமாகக் கூறியிருந்தார். இதுதவிர, கடந்த வருட இறுதிப் பகுதியிலிருந்து ஜனவரி வரையான பண்டிகைக்கால கொண்டாட்டங்களில் சுகாதார விதிமுறைகள் உரிய முறையில் பின்பற்றப்படாமையால்தான் கடந்த ஜனவரிக்குப் பின்னரான சில மாதங்களுக்கு நாட்டை முடக்குமளவுக்கு தொற்று தலைவிரித்தாடியிருந்தது.

இவற்றின் பின்னணியில், அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் சங்கம் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய நிலைமையில், கிரிக்கெட் போட்டிகளில் கலந்துகொள்ளும்போதும் முகக்கவசம் அணிதல் உள்ளிட்ட சுகாதார ஆலோசனைகளை பின்பற்று வது அவசியமானது.

பண்டிகைக் காலங்களில் கொரோனா வைரஸை பொதுமக்கள் அலட்சியப்படுத்தினால் அது புதிய அலைக்கு வழிவகுக்கும். பொதுமக்கள் சுகாதார வழிகாட்டுதல்களை கடைப்பிடிக்கவேண்டும் மற்றும் தடுப்பூசி போடப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

இதுதவிர, விமான நிலையம் மூலமாக மட்டுமன்றி, ஏனைய வழிகளில் நாட்டுக்குள் நுழையும் அனைவரும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

நாட்டுக்குள் வருபவருக்கு பரிசோதனையில் தொற்று இருந்தால், வைரஸின் மரபணு வரிசைமுறையை நடத்த போதுமான ஆதாரங்களை சுகாதார அமைச்சுக் கொண்டிருக்க வேண்டும். நாட்டுக்குள் நுழையும் மாறுபாடுகளைக் கண்டறிவதற்காக, இந்த வசதிகள் அத்தகைய இடங்களில் ஏற்படுத்தப்பட வேண்டும் - என்று சங்கம் மேலும் தெரிவித்தது. (த-இ)

## காணி...

னர் கைதுசெய்த விடயத்தில் பெரும் சந்தேகம் உள்ளது என்றுகூறிய, கைதுசெய்யப்பட்டவர்களின் தரப்பினர் நேற்று எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அந்த இருவரும் நேற்றுமுன்தினம் தொழிலுக்குச் சென்றுதிரும்பும்போது கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு பின்னர் இளவாலைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனர். இந்தநிலையில், குறித்த 2 மீனவர்களின் கைது நடவடிக்கைகளிலும் கடற்படை மீது தமக்கு சந்தேகம் உள்ளது என்றுகூறி மாதகல் கோணாவில் கடற்படை முகாம் முன்பாக பிரதேச மக்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அந்த இருவரும் ஒவ்வொரு நாளும் அதிகாலை கடற்றொழிலுக்குச் சென்று காலை 7 மணியளவில் கரைக்குத் திரும்பிவிடுவார்கள். நேற்றையதினம் (நேற்றுமுன்தினம்) அவர்கள் குறித்த நேரத்துக்கு கரை திரும்பாததால் நாம் கடற்படையினரிடம் முறையிட்டோம். படகு கவிழ்ந்ததா? அல்லது அவர்களுக்கு என்ன நடந்தது என ஏங்கிக் கொண்டிருந்தோம்.

ஆனால், அவர்கள் இருவரும், கடற்படையால் கடற்பரப்பில் வைத்து கைதுசெய்யப்பட்டு காங்கேசன்துறைக்கு அழைத்துச் செல்லப்பட்டு கஞ்சா கடத்தி வந்தனர் என்று குற்றம்சாட்டியுள்ளனர். பொலிஸ் நிலையத்தில் 2 மீனவர்களையும் சந்தித்த பொழுது, "தங்களை கயிற்றால் கட்டினர் என்றும், கடற்படையினரை உங்களால் என்ன செய்ய முடியும்? என்றுகூறி கடற்படையினர் தாக்கினர்" என்று இரு மீனவர்களும் கூறினரென எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தவர்கள் தெரிவித்தனர்.

இந்தநிலையில், மீனவர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், "கடலில் மீன்பிடிக்க செல்லும் பொழுது ஜி.பி.எஸ். கருவிகளை மீனவர்கள் பயன்படுத்துகின்றார்கள். ஆகவே கடற்படையினர் முறையான சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து இருக்கலாம். அவர்களுடைய அலைபேசிகளை சோதித்துப் பார்த்திருக்கலாம். யாருடன் தொடர்புகொள்கிறார்கள் என்று எதுவுமே விசாரணைக்கு உட்படுத்தாமல் போராட்டத்தில் ஈடுபட்ட காரணத்தை வைத்துக்கொண்டு இருவரையும் கைது செய்துள்ளனர் என்றே எங்களுக்குப் புரிகின்றது. இவ்வாறு செய்வதன் மூலமாக, நிலப்பரப்புக்கள் பறிக்கப்படுகின்ற கடற்படையினரின் செயற்பாடுகளுக்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவிப்பதற்கு பயப்படும் நிலைமையை உருவாக்கவே கடற்படையினர் முயற்சிக்கின்றனர். அதன் மூலமாக நில அபகரிப்புப் போராட்டத்தை முறியடிப்பதே கடற்படையினரின் நோக்கம்" - என்று தெரிவித்தார்.

"எனது சகோதரன் இதுவரைகாலமும் எதுவித பொலிஸ் வழக்குகளிலும் உட்படாதவர். ஆகவே சிறப்பான ஒரு விசாரணையை மேற்கொண்டு சரியான தீர்வை வழங்குமாறு கோருகின்றேன்" என்று கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவரின் சகோதரன் தெரிவித்தார்.

கடற்படையினரின் நடவடிக்கைகளால், எமது தொழிலாளர்கள் கடற்றொழிலுக்குச் செல்லவே அஞ்சுகிறார்கள். தம் மீது ஏதேனும் குற்றங்களை சுமத்தி விடுவார்களா என்று அஞ்சுகின்றனர். எனவே, இது தொடர்பில் ஆராய்ந்து விசாரணை மேற்கொள்ளவேண்டும் - என்று, கோணாவில் கடற்றொழிலாளர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (த-125)

## இரண்டாவது...

நாணயக்காரமீது தாக்குதல் நடத்துவதற்கு முற்பட்ட ஆளுங்கட்சியினர் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு வலியுறுத்தியுமே ஐக்கிய மக்கள் சக்தியினர் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

சபாநாயகரிடமிருந்து உரிய பதில் கிடைக்கும்வரை சபை அமர்வுகளில் பங்கேற்கமாட்டோம் எனவும் அறிவித்துள்ளனர்.

இதேவேளை, நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் ஆராய்வதற்கான குழு நாளை (இன்று) பெயரிடப்படும். ஒரு தரப்பு இணக்கம் தெரிவித்துள்ளது. குழுவில் இடம்பெற வேண்டிய மற்றைய தரப்பிடமும் விருப்பம் கோரப்படும். எனவே, சபை அமர்வில் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கின்றேன் என்று சபாநாயகர் நேற்று சபை அமர்வின் போது அறிவித்தார். எதிரணியின் கோரிக்கையை ஏற்று விசாரணைக் குழுவை அமைக்குமாறு ரணில் விக்கிரமசிங்கவும் வலியுறுத்தினார். (த-44)

## கரைசேரும்...

பினருமான பிரேமச்சந்திரன் தெரிவித்தார். யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாண மாவட்ட கரையோரங்களில் கடந்தவாரம் ஆறு சடலங்கள் கரையொதுங்கியுள்ளன. இது தொடர்பில் எந்த விதமான தகவல்களும் வெளிவரவில்லை. காணாமலாக்கப்பட்டவர்கள் பற்றிய தகவல்கள் இதுவரை வெளிவராத நிலையில், அடையாளம் தெரியாத சடலங்கள் கரை ஒதுங்குகின்றமை தொடர்பில் அச்சம் ஏற்பட்டுள்ளது என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் கூறியுள்ளனர்.

கடற்கரைகளில் சடலங்கள் ஒதுங்குகின்றன என்றால், கடலில் விபத்துக்கள் இடம்பெற்றிருக்கவேண்டும். அவ்வாறில்லையெனில், இலங்கை மீனவர்கள் அல்லது இந்திய மீனவர்களின் மீன்பிடி படகுகள் விபத்துக்குள்ளாகியிருத்தல் வேண்டும். ஆனால் அவ்வாறு விபத்துக்கள் நடைபெற்றனவாக தகவல்கள் இல்லை. அரசாங்கம் எந்தவித விசாரணைகளையும் மேற்கொள்ளவில்லை.

அதனால் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் அச்சத்தில் உள்ளனர். கரையொதுங்கியுள்ள சடலங்கள் பற்றிய தகவல்களை மக்களுக்கு விரைந்து வழங்க வேண்டும். பொலிஸார், கடற்படையினர் மீது அச்சம் ஏற்பட்டுள்ளது. எனவே, இந்த இரு தரப்பினருமே சடலங்கள் கரையொதுங்கும் சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை தீவிரப்படுத்தி, அதன் உண்மை நிலைமையை வெளிப்படுத்த வேண்டும் - என்று சுரேஷ் பிரேமச்சந்திரன் கோரிக்கை விடுத்தார். (த)

## வவுனியா...

மாதம் இடம்பெற்ற அமர்வில், சபையின் 2021 ஆம் ஆண்டுக்கான பாதீடு முன்வைக்கப்பட்டநிலையில் அது வாக்கெடுப்புக்கு விடப்பட்டு தோற்கடிக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில், அது திருத்தம்செய்யப்பட்டு நேற்றைய அமர்வில் முன்வைக் கப்பட்டு விவாதிக்கப்பட்டது.

இதன்போது, மக்கள் சார்பான வேலைத் திட்டத்துக்கு போதியளவு நிதி ஒதுக்கப்படவில்லை என பல்வேறு உறுப்பினர்களால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

குறிப்பாக, இந்த வரவு-செலவுத்திட்டத்தை தோற்கடிக்கவேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் வி.சஞ்சுதன் கருத்துத் தெரிவித்தார். அவரது கருத்தை தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினர் முகுந்தன் வழிமொழிந்தார்.

இந்தநிலையில், அநேக உறுப்பினர்களின் எதிர்ப்பால் வரவு- செலவு திட்டம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. இதன்போது, தமிழர் விடுதலைக் கூட்டணி, பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக்கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னனி, சுயேச்சைக்குழு ஆகியவற்றை சேர்ந்த17உறுப்பினர்கள் அதற்கு எதிராக வாக்களித்தனர்.

பாதீட்டுக்கு ஆதரவாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சேர்ந்த 8 உறுப்பினர்களும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஓர் உறுப்பினரும் வாக்களித்தனர். இதனால் 9 மேலதிக வாக்குகளால் 2021 ஆம் ஆண்டுக்கான பாதீடு இரண்டாவது முறையாகவும் தோல்வியடைந்தது. இந்தநிலையில், உள்ளூராட்சி சபை சட்டங்களின்படி பிரதேச சபைத் தவிசாளர் பதவியிழக்கின்றார். (த-110)

## சங்கானையில்...

யடி கோவிலுக்கு அருகே உள்ள வீட்டில் 14 பவுண் நிறையுடைய நகை நேற்று முன்தினம் திருடப்பட்டுள்ளது.

குறித்த வீட்டில் உள்ளவர்கள் நேற்று மு.ப 10 மணிக்கு கொண்டாட்டம் ஒன்றுக்கு சென்றுவிட்டு மாலை 5 மணிக்கு வீடு திரும்பியபோது, கதவு உடைக்கப்பட்டிருந்தது. உள்ளேசென்று பார்த்தபோது குறித்த நகை திருடப்பட்டுள்ளது. இது பற்றி இளவாலைபொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (த-27)

## வவுனியாவில்...

ளில் ஒரே இரவில் (நேற்றுமுன்தினம்) திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

வவுனியா மில்வீதி, சூசைப்பிள்ளையார் குளம்வீதி, கந்தசாமி கோவில் வீதி ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள விற்பனை நிலையங்களில் கூரைத்தகடு மற்றும் கதவுகளை உடைத்து உள்நுழைந்து, பணம் திருடப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை கடைகளை திறக்கச் சென்றிருந்த உரிமையாளர்கள் திருட்டு இடம்பெற்றுள்ளதனை அவதானித்து வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

குறித்த கடைகளிலிருந்து பல இலட்சம் ரூபா பணம் திருடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. சம்பவம் தொடர்பாக சி.சி.ரி.வி. கமராக்களின் உதவியுடன் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-110)

## நேற்றும்...

ளன. கல்வயலில், பாடசாலைக்குப் புறப்படுவதற்கு ஆசிரியர் ஒருவர் சமையலில் ஈடுபட்டு, தானும் தயாராகிக்கொண்டிருந்தவேளை, சமையலறையில் எரிவாயு அடுப்பு வெடித்துள்ளது.

அடுப்பு வெடித்து தீச்சுவாலை எழுந்தபோதிலும் அவர் வெளியே வைக்கப்பட்டிருந்த சிலிண்டருடனான இணைப்பை துண்டித்தமையால் தீ சுவாலை கட்டுப்படுத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். இதேவேளை, கொடிகாமம் தவசிகுளம் பகுதியிலும் நேற்று எரிவாயு அடுப்பு வெடித்துள்ளது. உணவு சமைத்துக்கொண்டிருந்தபோது எரிவாயு அடுப்ப வெடித்துள்ளது. அதனால் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

**வவுனியாவிலும் வெடிப்பு**

இவை மட்டுமன்றி, வவுனியாவிலும் நேற்றுமுன்தினம் இரவு எரிவாயு வெடிப்பு வெடித்துள்ளது. பெரும் சேதம் ஏற்படவில்லை. (த-9,20)

## நாடு...

பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளன. அகில இலங்கை அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம், அகில இலங்கை சுதந்திர கிராம அலுவலர் சங்கம், அகில இலங்கை அரச முகாமைத்துவ உதவியாளர் உத்தியோகத்தர் சங்கம், இலங்கை கனிஷ்ட சேவையாளர்களின் தொழிலாளர் சங்கம் ஆகியன இன்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

## போராட்டத்துக்கு...

ரவு வழங்கியுள்ளது.

குறித்த சங்கம் அனுப்பிய செய்திக் குறிப்பில், நியாயமான கோரிக்கைகளின் அடிப்படையில் முன்னெடுக்கப்படும் இந்தப் போராட்டத்துக்கு வடக்கு மாகாணத்தில் கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகிய நாமும் ஒத்துழைப்பு நல்கி போராட்டத்தை வெற்றிபெறச் செய்வோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (த-19)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கொமர்ஷல் வங்கியின் 9 மாதகால வளர்ச்சிக்கு வழியமைத்துள்ள செலவுக் கட்டுப்பாட்டு வழிமுறை

COMMERCIAL BANK

கடந்த செப்ரெம்பர் மாதத்துடன் முடிவடைந்துள்ள முதல் ஒன்பது மாத காலத்தில் கொமர்ஷல் வங்கிக் குழுமம் பண்பு ரீதியான சமமான வளர்ச்சியைக் கண்டுள்ளது. இந்த மூன்றாவது காலாண்டு காலப்பகுதியில் சில முக்கிய பங்களிப்புக்களில் மெதுவான போக்கு காணப்பட்டுள்ள நிலையிலும் இந்த வளர்ச்சி எட்டப்பட்டுள்ளது.

இந்தக் குழுமம் இலங்கையின் மிகப் பெரிய தனியார் வங்கியான வரையறுக்கப்பட்ட கொமர்ஷல் வங்கி, அதன் கிளைகள் மற்றும் இணை நிறுவனங்கள் என்பனவற்றை உள்ளடக்கியதாகும். குறிப்பிட்ட காலப்பகுதியில் 120.050 பில்லியன்கள் மொத்த வருமானமாக ஈட்டப்பட்டுள்ளது. இது 2020ஆம் ஆண்டின் இதே 9 மாதக் காலத்தோடு ஒப்பிடுகையில் 5.66 வீதம் அதிகமானதாகும். 2021ஆம் ஆண்டின் முதல் அரையாண்டுக்கான 6.34 வீதமான வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் மூன்றாவது காலாண்டு 4.34 வீதம் வளர்ச்சியை அடைந்துள்ளது.

மொத்தவருமானத்தின் மிகப்பெரிய அலகான வட்டி வருமானம் 3.43 வீதத்தால் அதிகரித்து 96.227 பில்லியன்க ளாக உள்ளது. 2021 ஜூன் வரையான வளர்ச்சியில் இது 3.20 வீதம் அதிகரிப்பாகும். அத்தோடு வட்டிச் செலவுகள் தொடர்ச்சியாக வீழ்ச்சி அடைந்துள்ளன. இது ஆண்டின் முதல் அரையாண்டை விட குறைந்த வீதத்தில் அமைந்துள்ளது என குழுமம் அறிவித்துள்ளது.

தொடர்ச்சியான இந்த ஒன்பது மாதகாலத்தில் வட்டிச் செலவுகள் 13.42 வீதத்தால் குறைந்து 48.693 பில்லியன்களாக உள்ளது. இது தேறியவட்டி வருமானத்தை 47.533 பில்லியன்களாகப் பதிவுசெய்ய உதவியுள்ளது. இது 29.18 வீத வளர்ச்சியாகும்.

ஒன்பது மாதகாலத்துக்குமான மொத்த செயற்பாட்டு வருமானம் 68.951 பில்லியன்களாகப் பதிவாகி 23.53 வீத வளர்ச்சியைப் பிரதிபலிக்கின்றது. குறைபாட்டுக் கட்டணங்களைக் கட்டுப்படுத்தும் குழுமத்தின் குறிப்பிடத்தக்க அடைவாக மீளாய்வுக்கு உட்பட்ட இந்தக் காலப்பகுதியில் 17.997 பில்லியன் உள்ளது. 2021 முதல் அரையாண்டு இறுதியில் இருந்த 47.44 வீத வளர்ச்சியோடு ஒப்பிடுகையில் இந்த வளர்ச்சி 7.56 வீதம் மட்டுமே. இது தேறிய செயற்பாட்டு வருமான வளர்ச்சியை 30.37 வீதத்தால் அதிகரித்து 50.954 பில்லியன்களாக உள்ளது. செயற்பாட்டுச் செலவுகள் வளர்ச்சியைத் தடுணக்கும் 8.39 வீதத்தால் குறைக்கும் குழுமத்தின் தொடர் செயற்பாடுகள் (2021 முதல் அரையாண்டில் 8.42%) ஒன்பது மாதக் காலத்துக்குமான மொத்தச் செயற்பாட்டுச் செலவை 1.647 பில்லியன்களால் அதிகரித்து 21.280 பில்லியன்களாகப் பதிவுசெய்துள்ளது.

இதன் விளைவாக நிதிச் சேவைகளுக்கான வற் வரிகள் 52.55 வீத கணிசமான அதிகரிப்புக்கு மத்தியிலும் வற் வரிக்கு முந்திய



நீதியரசர் கே. ஸ்ரீபவன்,
கொமர்ஷல் வங்கித் தலைவர்.



எஸ்.ரெங்கநாதன்,
முகாமைத்துவப் பணிப்பாளர் குழுவின்
பிரதம நிறைவேற்று அதிகாரி

செயற்பாட்டு இலாபம் இந்தக் காலப்பகுதியில் 29.674 பில்லியன்களாக உள்ளது. ஆண்டின் முதல் ஆறு மாதகாலத்தில் பதிவான 41.09 வீதம் அதிகரித்த வளர்ச்சியை இது பதிவுசெய்துள்ளது.

இந்த ஒன்பது மாதகாலத்துக்குமான நிதிச் சேவைகளுக்கான பெறுமானம் சேர் வரியாக 4.608 பில்லியன்களைச் செலுத்தி உள்ளது. இலாபங்களின் வளர்ச்சி வரிசையில் நோக்கும்போது இது 50.55 வீதம் அதிகமாகும். இதன் விளைவாக இந்தக் காலப்பகுதிக்கான வரிக்கு முந்திய இலாபம் 25.067 பில்லியன்களாகும். இது 52.90 வீதம் வளர்ச்சியாகும். வருமானவரி 15.92 வீதத்தால் அதிகரித்து 6.049 பில்லியன்களாகஉள்ளது. வருமானவரி விகிதத்தில் ஓரளவு குறைவு விகிதத்தை இது காட்டுகின்றது. இதன் தொடராக ஒன்பது மாதகாலத்துக்கான வரிக்குப் பிந்திய இலாபம் 70.17 வீதமாக அதிகரித்து 19.017 பில்லியன்களாக உள்ளது. குறிப்பிடத்தக்க விதத்தில் இது குழுமத்தின் 2020ஆம் ஆண்டின் முழு வருடத்துக்குமான வருமானத்தைவிட 1.931 பில்லியன் அல்லது 11.30 வீதம் அதிகமாக உள்ளது.

இந்த ஒன்பது மாதகாலத்துக்கான குழுமம் செலுத்திய மொத்த வரி 10.981 பில்லியன்களாகும். வெவ்வேறாகப் பார்க்கும் போது வரையறுக்கப்பட்ட கொமர்ஷல் வங்கி குறிப்பிட்ட காலப்பகுதியில் வரிக்குமுந்திய இலாபமாக 24.425 பில்லியன்களைப் பதிவுசெய்துள்ளது. இது 56.91 வீதம் வளர்ச்சியைக் காட்டுகின்றது. வரிக்குப் பிந்திய இலாபம் 18.606 பில்லியன்க ளாக உள்ளது. இது 75.61 வீதம் வளர்ச்சியைக் காட்டுகின்றது.

குழுமத்தின் மொத்த சொத்துக்களின் வளர்ச்சி கடந்த ஒன்பது மாதகாலத்தில் 200 பில்லியன்களால் அல்லது 11.35 வீதத்தால் வளர்ச்சி அடைந்துள்ளது. 2021 செப்ரெம்பர் 30ஆம் திகதி இதன் பெறுமதி 1.962 ட்ரில்லியன் ரூபாவாக உள்ளது.

மொத்தக் கடன்களும் முற்பணங்களும் 105.195 பில்லியன்களாக அல்லது 10.94 வீதத்தால் அதிகரித்து 1.067 ட்ரில்லியன்களாக உள்ளது. சராசரி மாத வளர்ச்சியாக 11.688 பில்லியன்கள் கடந்த ஒன்பது மாதகாலத்தில் பதிவாகி உள்ளன. இதே காலப்பகுதியில் கடன் புத்தக வளர்ச்சி 12.36 வீதமாக உள்ளது.

குழுமத்தின் வைப்புக்கள் 161.272 பில்லியன்கள் அல்லது 12.53 வீதம் வளர்ச்சியை குறிப்பிட்ட காலப்பகுதியில் பதிவுசெய்துள்ளது. இதன் மாதாந்த சராசரி வளர்ச்சி; 17.919 பில்லியன்களாகும். 2021 செப்ரெம்பர் 30ஆம் திகதி இதன் பெறுமதி 1.448 ட்ரில்லியன் ஆகும். கடந்த 12 மாதகாலத்தில் வைப்பு வளர்ச்சி 18.51 வீதமாகும்.

இலங்கையில் முழுவதும் காபன் நடுநிலையான முதலாவது வங்கியான கொமர்ஷல் வங்கி, உலகின் முதல் ஆயிரம் வங்கிகள் என்ற பட்டியலில் இடம்பிடித்த இலங்கையைச் சேர்ந்த முதலாவது வங்கியாகவும் அந்தப் பட்டியலில் தொடர்ச்சியாக 11 ஆண்டுகள் இடம்பிடித்த இலங்கையின் ஒரே வங்கியாகவும் விளங்கும் கொமர்ஷல் வங்கி, இலங்கையில் 268 கிளைகளையும் 931 தானியங்கி வங்கி இயந்திரங்களையும் (ஏ.டி.எம்) கொண்டவலையமைப்பைக் கொண்டுள்ளது.

## விற்பனைக்குண்டு

**பட்டா ரக வாகனம்**
விற்பனைக்குண்டு.

(cs.41455) (2.6) **077 351 4753**

## அறை வாடகைக்கு தேவை

அரச உத்தியோகத்தர் (ஆண்) ஒருவருக்கு யாழ்ப்பாணத்தில் அறை வாடகைக்கு தேவை.

(CS 791) (4/6) **070 605 9585**

## வேலைவாய்ப்பு

மல்லாவி, மாங்குளம், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் கட்டட நிர்மான வேலை செய்வதற்கு மேசன், கூலியாட்கள் உடன் தேவை. தங்குமிட வசதி உண்டு. நாள்/கிழமை அடிப்படையில் சம்பளம் வழங்கப்படுவதோடு தொடர்ச்சியாக வேலை வழங்கப்படும்.
(CS 798) 1-6

தொடர்புகளுக்கு: **0777 120 945, 076 316 5738**

## பொருளியற் கல்லூரி

நாவலர் வீதி - யாழ்ப்பாணம்

**A/L 2021**

**தமிழ்**

**கருத்தரங்கு**

வளவாளர்
**திரு.N.சத்தியவேந்தன்**
B.A(Hons),Mphil(Tamil)

ஆரம்பம் - **09.12.2021**
வியாழன் - காலை 9.00-1.00 மணிவரை

- 40 மணித்தியாலம் நடைபெறும்.
- ஏனைய கருத்தரங்கு திகதி நேரடியாக அறிவிக்கப்படும்.
- வெளி மாணவர்களும் பங்குபற்றலாம்

தொடர்புகளுக்கு: **077 3763511**

**A/L 2022, 2023**

பொருளியற் கல்லூரி யாழ்ப்பாணம்,
பொருளியற் கல்லூரி சுன்னாகம்,
BARATHY சித்தன்கேணி
வகுப்புக்கள் நடைபெறுகின்றதோடு
புதிய அனுமதிகளும் வழங்கப்படுகின்றன.
(CR 5717) 1-6

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



கடந்த 08.11.2021 திங்கட்கிழமை இறைபதமடைந்த எமது குடும்ப குல விளக்கு

அமரர் **செல்லத்தம்பி விக்னேஸ்வரன் (விக்கி)**

அவர்களின் 31ஆம் நாள் நினைவஞ்சலிக் கிரியைகள் இன்று (08.12.2021) புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறுகிறது.

**சகோதரர்கள்**
தும்பளை கிழக்கு, பருத்தித்துறை.

(CS 41445) (3/6)

## காணி விற்பனைக்கு

கோப்பாய் - உரும்பிராய் பிரதான வீதியில் இருந்து 500M தூரத்தில் 6 பரப்பு காணி விற்பனைக்கு.
1 1/2 பரப்பாக பிரித்து வழங்கப்படும்.
(உரும்பிராய் கிருஸ்ணன் கோவில் சந்தி அருகாமை)

**077 6585 999**
**077 911 6983**
(CS 801) 1-6

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சுன்னாகம் கந்தரோடை பகுதியில் கணக்கர் வளவு 18 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (நிலப்பரப்பு) 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடி பாதையுடன்.
சுன்னாகம் பஸ் நிலையத்தில் இருந்து 800 m தூரம்.
பார்வையிடும் நேரம்: காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை
(தரகர் தேவையில்லை)
விலை நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: **077 81 47 389, 077 61 47 333**
(CS 41454) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி: news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.12.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.